02 - 99

03-09-2011
பக்கங்கள்: 24
விலை: 15/=

# Saturday மெயில்

UNIVERSITY LIBRARY
06 SEP 2011
PERIODICALS DIVISION

සැටඩේ මේල්

*A Fascinating Weekly Bulletin*



# மணப்பெண்கள் இறக்குமதியில் சீனா

அடுத்த பக்கம் புரட்டுங்கள்

Registered as a Newspaper at G.P.O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவை சந்தேகிக்கும் அமெரிக்கர்கள்



அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தில் 7 பேரில் ஒருவர் 3 ஆயிரம் பேர் பலியான 9/11 தீவிரவாதத் தாக்குதலை அமெரிக்காவே தான் நடத்தியது என்று கருதுவதாக ஒரு கருத்துக் கணிப்புத் தெரிவித்துள்ளது.

இந்தக் கருத்துக் கணிப்பில் இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவில் தலா ஆயிரம் பேர் கலந்துகொண்டனர். அதில் 14 சதவீத பிரித்தானியர்களும் 15 சதவீத அமெரிக்கர்களும் 9/11 தீவிரவாதத் தாக்குதலுக்குப் பின் அமெரிக்க நிர்வாகம் உள்ளதாக நினைக்கின்றனர் என்று டெய்லி மெயில் செய்தி வெளியிட்டுள்ளது.

அல்-ஹைடா தான் 9/11 தீவிரவாதத் தாக்குதலை நடத்தியது என்பது பொதுவான கருத்து. ஆனால் சிலர் இதில் அமெரிக்க அரசின் தலையீடு இருப்பதாகக் கூறுகின்றனர். அமெரிக்க அரசின் தலையீடு இருக்கிறது என்று நீங்கள் நினைக்கிறீர்களா? என்று கருத்துக் கணிப்பில் கலந்து கொண்டவர்களிடம் கேட்கப்பட்டது.

16 முதல் 24 வயதுள்ள இளைஞர்களில் 24 சதவீதத்தினர் இந்தத் தாக்குதலுக்கு பின் பெரிய சதிக் கூட்டம் உள்ளது என்று நம்புகின்றனர். ஆனால் 68 சதவீதத்தினர் எந்தவித சதியும் இல்லை என்று நினைக்கின்றனர்.

'சதித்திட்ட கோப்புகள்-10 ஆண்டுகளைத் தாண்டி' என்ற பி.பி.சி. ஆவணப்படத்திற்காக இந்தக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலுக்கு பின் ஏதோ இரகசியம் உள்ளது என்று பலர் நம்புவது குறித்த ஆய்வு இது. தொலைபேசி மூலம் இந்தக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## மணப்பெண்கள்...

சீனாவில் மணப்பெண்களுக்கு பாரியளவிலான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் முதல் கட்டமாக 36000 மணப்பெண்களை அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய சீனா திட்டமிட்டுள்ளது.

சீனாவில் ஒரு குடும்பத்துக்கு ஒரு குழந்தை என்ற கட்டாய சட்டம் அமுலில் உள்ளது. எனவே, அந்த குழந்தை ஆணாக இருக்க வேண்டும் என இந்நாட்டு மக்கள் விரும்புகின்றனர். எனவே, கருவில் இருக்கும் குழந்தை ஆணா? பெண்ணா? என ஸ்கேன் மூலம் கண்டறிகின்றனர். பெண் குழந்தையாக இருந்தால் அதை கருவிலேயே அழித்து விடுகின்றனர். இதனால் அங்கு பெண் குழந்தைகள் பிறப்பு விகிதம் மிகவும் குறைந்துள்ளது.

எனவே, திருமணம் செய்ய பெண் கிடைக்காமல் இலட்சக்கணக்கான சீன இளைஞர்கள் தவித்து வருகின்றனர். இக் குறையை போக்க தங்களது பக்கத்து நாடுகளான வியட்நாம், லாவோஸ் மற்றும் வடகொரியாவில் இருந்து மணப்பெண்களை இறக்குமதி செய்ய சீன அரசு முடிவு செய்துள்ளது.

முதலில் 36 ஆயிரம் மணப்பெண்கள் பக்கத்து நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட உள்ளனர்.

சீனாவில் பெண் குழந்தை பிறப்பதை பெரும்பாலும் விரும்புவதில்லை சீனப் பெண்கள் ஆண் குழந்தை பிறப்பதையே விரும்புகிறார்கள். அதை கௌரவமாக கருதுகிறார்கள். பெண் குழந்தை பிறந்தால் பெற்ற தாய்க்கு பெரும் அதிர்ச்சியும், மனக்கவலையும் அதிகரித்து ரத்தப்போக்கு மற்றும் விஷக் காய்ச்சல் ஏற்படுகிறதாம்.

சீனர்களின் இந்த மனநிலைக்கு கை மேல் பலனாக இன்னும் 10 வருடங்களில் சீனாவில் இருக்கின்ற ஒவ்வொரு 5 இளைஞர்களிலும் ஒருவர் தனக்கான பெண் துணை இல்லாது வாழ நேரிடும் என்று *chinese academyof social sciences (CASS)* என்கிற அமைப்பு எச்சரித்துள்ளது. அதாவது 2020 அளவில் சீனாவில் இருக்கப் போகின்ற 19 வயதுக்குட்பட்ட ஆண்களின் எண்ணிக்கை அங்கே இருக்கப்போகின்ற 10 வயதுக்குட்பட்ட பெண்களின் எண்ணிக்கையை விட 30 முதல் 40 மில்லியன்களால் அதிகமாக இருக்குமாம்.

சீனா என்றவுடனே அதன் ஒரு பிள்ளைக் கொள்கை நினைவுக்கு வந்து விடும். வீட்டுக்கொரு பிள்ளை என்பதைச் சட்டமாக பின்பற்றும் சீனாவில் இருப்பவர்கள், ஆண் பிள்ளைகளே பிற்காலத்தில் தமக்கு உதவுவார்கள், தம்மைப் பராமரிப்பர் என்ற நம்பிக்கையில் பெண் குழந்தைகளை பிறந்த உடனேயே கொன்று விடுவது நடக்கக் கூடும் என்று வாதம் முன்வைக்கப்பட்டாலும் அந்தத் கொள்கையையே முழுக் காரணம் என்று கூறி விடமுடியாது. சீனாவில் ஒரு பிள்ளைக்கொள்கை 1979 இல் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஆனால் ஆண் குழுந்தைகள் பிறப்பது 90 களில் இருந்துதான் அதிகரித்துச் செல்கின்றது. தவிர 90 களுக்குப் பின்னர் சீனாவில் மாத்திரமல்லாது இந்தியா, தாய்வான், தென்கொரியா, முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகள் உள்ளிட்ட பல நாடுகளில் ஆண் குழந்தைகளின் எண்ணிக்கை பெண் குழந்தைகளின் எண்ணிக்கையைவிட அதிகரித்து வந்திருக்கிறது. ஆனால், இந்த நாடுகளில் சீனாவில் இருப்பது போல ஒரு பிள்ளைக் கொள்கை இல்லை.

நிக் எபர்ஸ்டாட் *(Nick Ebersadt)* என்கிற புள்ளி விபரவியலாளர் சொல்வது போல ஆண் குழந்தைகள் மீது சமூகத்தில் இயல்பாகவே அதீதி விருப்பம் இருக்கின்ற சூழலில் கருவிலேயே குழந்தையின் பாலினத்தினை அறிந்து கொள்ளும் தொழிநுட்பமும் வேகமாகப் பரவியதே இதற்கான முக்கிய காரணமாக இருக்கவேண்டும். உதாரணமாக, இந்தியாவில் அல்ட்ரா சவுண்ட் ஸ்கானிங் மூலம் கருவிலிருக்கும் குழந்தையின் பாலினத்தை அறிந்து கொள்ளும் சோதனைகள் அறிமுகப்படுத்தப்பட்ட கடந்த 20 ஆண்டுகளில் 20மில்லியன் பெண் குழந்தைகள் பிறக்கப்போகும் குழந்தைகளின் பாலினம் தொடர்பான பெற்றோரின் தேர்வு காரணமாக கொல்லப்பட்டிருப்பதாக 2007 இல் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்று கூறுகிறது.

சீனாவில் நூறு வயதைத் தாண்டியவர்கள் கிட்டத்தட்ட 4 ஆயிரம் பேர் உள்ளனர். இவர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெண்கள்! என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மர்ம மனிதர்களால் முடங்கும் குடாநாடு

நாட்டில் யுத்தம் கருக்கொண்டது முதல் அதனால் விளைந்த பேரழிவுகள் உட்பட தற்போது மலர்ந்துள்ள சமாதான காலம் வரை சொல்லொணாத் துயரங்களுக்கு முகங்கொடுத்து வருபவர்கள் பெண்களே.இதிலும் நாடளாவிய ரீதியில் கலகத்தை ஏற்படுத்திவரும் கிறீஸ் பூதங்கள் என்ற மர்ம நபர்களால் அதிகம் கிலி கொண்டிருப்பதும் பெண்கள் தான்.ஏனெனில் இந்தப் பூதங்களின் இலக்கு அவர்களே.

யுத்த அரக்கனிடம் சொத்து,சுகம் என்று சகலத்தையும் பறிகொடுத்து வாழவேண்டிய வயதில் கைம்பெண்களாகியிருக்கின்ற எத்தனையோ ஆயிரக்கணக்கான பெண்கள் இன்று பூதத்திடமிருந்து தப்பிப்பதற்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

கட்டிய கணவனில்லை,தொட்டில் பிள்ளையில்லை,தம் சோகத்தைச் சொல்லியழ உற்றதொரு சுற்றமில்லை என்று வாழ்வது போல் செத்துக்கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான கைம்பெண்கள் இந்தப் பேய்கள்- பூதங்கள் மத்தியில் நாளாந்தம் அஞ்சி அஞ்சி உயிர் பிழைப்பதைவிட யுத்தத்தில் தாமும் செத்து மடிந்திருக்கலாம் என்று சதா கண்ணீர் வடித்தவண்ணமுள்ளனர்.

இதேவேளை,பெரும்பான்மை இனப்பெண்களைத் தாக்காத-அச்சுறுத்தாத இந்த கிறீஸ் பூதங்கள் சிறுபான்மை இனங்களாகிய தமிழ்-முஸ்லிம் பெண்களை மாத்திரம் இலக்கு வைப்பதன் மர்மம் என்ன? என்று சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்.

இது இவ்வாறிருக்க ஜனாதிபதிக்கு ஏற்பட்ட தோஷத்தை நிவர்த்திப்பதற்கு 4000 பெண்களின் தனங்கள் அறுக்கப்பட்டு இரத்தம் சிந்த வைக்க வேண்டும் என்று ஜோதிடர் கூறியதாகவும் வதந்திகள் பரவுகின்றன.

வன்னியில் இவ்வாறு நாடளாவிய ரீதியில் சிறுபான்மை இனப்பெண்கள் இலக்குவைக்கப்பட்டு இந்த மர்ம மனிதர்களால் தாக்கப்பட்டு வருவதால் அவர்களின் தொழில் நடவடிக்கைகளுக்கும் முடங்கியுள்ளன.இதைவிட வீட்டைவிட்டு வெளியில் நடமாடுவதற்கே அவர்கள் பெரிதும் அஞ்சுகின்றனர்.இரவில் பல குடும்பங்கள் சேர்ந்து நித்திரையின்றி விழித்துக் காவல் காக்கின்றன.இதெல்லாம் எதுவரை தொடரும்.

தோட்டப்பகுதிகளில் கால்கோள் கொண்ட இந்த கிறீஸ் பூத விவகாரம் கிழக்கு மாகாணம் பூராவும் பெரும் களேபரத்தை ஏற்படுத்தி வன்னி, யாழ்ப்பாணம் போன்றவற்றிலும் கலகத்தை ஏற்படுத்தி வருகின்றது.யாழில் பெண்கள் நடமாட்டம் குறைந்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

மேலும் கற்றல் நடவடிக்கையில் ஈடுபடுகின்ற மாணவர்களில் குறிப்பாக பெண் பிள்ளைகளின் கல்வியும் பாதிக்கப்பட்டுள்ளது.கல்வி நிலையங்களுக்கு இவர்கள் சென்று கற்பதற்கு அச்சம் காரணமாகப் பெற்றோர் விடுவதில்லை.எவ்வேளையில் என்ன நடக்கும் என்று தெரியாது பெரும் பதற்ற நிலையிலேயே இவர்கள் வாழ்கின்றனர்.

இதேவேளை, யாழ்.குடாநாட்டின் பல பாகங்களிலும் இந்த கிறீஸ் பூதங்கள் இரவு வேளைகளில் மோட்டார் சைக்கிள்களில் செல்வதாகவும் ஆங்காங்கே காவலரண்களில் இருக்கும் இராணுவத்தினர் இதனைக் கண்டும் காணாது போல் இருப்பதாகவும் குறித்த பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கூறுகின்றனர்.

இதேநேரம்,இராணுவத்தினர் தான் இவ்வாறு செயற்படுகின்றனர் என்றும் பொதுமக்கள் கூறுகின்றனர். இதனையே பல அரசியல்வாதிகளும் சமூக நலன்விரும்பிகளும் கூறுகின்றனர். எனவே, இத்தகைய பதற்ற நிலைமையை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி மீண்டும் வெள்ளைவான் கலாசாரத்தைத் தோற்றுவிக்கப் படையினர் முயற்சிக்கின்றனரா?அன்றேல் மக்கள் புரட்சி வெடிப்பதை விரும்புகின்றனரா?என்றும் பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

ஆதலால், இந்த கிறீஸ் பூதம் தொடர்பான விவகாரத்தில் அரசு விரைந்து நடவடிக்கை எடுத்து அச்சத்தின் மத்தியில் வாழும் பெண்கள் சமூகத்தைக் காக்க முன்வரவேண்டும் என்று சமூகப் பெரியோர் அறைகூவல் விடுக்கின்றனர்.

எஸ்.ரூபனா

## ஒலியினால் 'ஒளி'யும் நிம்மதி

அரசியல் கட்சிக்கூட்டம். தலைவர் இரவு 9 மணிக்கு உரையாற்றுவார்.ஆனால்,மதியம் 2 மணியில் இருந்தே ஒலிபெருக்கிகள் உரையாற்றத் தொடங்கிவிடும்.சினிமாப் பாடல்கள் தத்துவப்பாடல்கள் என சத்தம் விண்ணைத் தொடும்.அப்பகுதியில் உள்ள மக்களுக்கோ டென்ஷன் எல்லை தாண்டும்.

கட்சிக்கூட்டம் நடந்தால் இதே தொல்லை தான்.சத்தம் காதைக் கிழிக்குது என வருவோர் போவோர் புலம்பிக்கொண்டு போவதைப் பார்க்கலாம்.அதிகமான ஒலியினால் மனிதர்களுக்குப் பாதிப்புகள் ஏற்படுவதால் ஐ.நா. சபை ஒலியின் அளவுக்கு கட்டுப்பாடு ஏற்படுத்தியது.நகரங்களில் ஒலியின் அளவு 50 முதல் 60 டெசிபலைத் தாண்டாமல் இருக்கவேண்டும் என்பது விதி.

ஒலியின் அளவுகள் ஒவ்வொரு இடத்திற்கும் தகுந்தாற்போல் பிரிக்கப்பட்டன.மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள்,முதியோர் இல்லங்கள் முக்கிய அலுவலகங்கள் சார்ந்த பகுதிகளில் குறிப்பிட்ட அளவைத் தாண்டக்கூடாது.பறவைகள்,விலங்குகள் வந்துபோகும் பகுதிகளில் முற்றிலுமாகத் தவிர்த்து விடுதல் வேண்டும்.

மனித குலத்தின் மீது அக்கறையுடன் கொண்டுவரப்பட்ட சட்டங்களை மீறுவதில் கட்சிக்காரர்கள் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் இல்லை.அமைதியாக நடைபெறவேண்டிய கோயில் திருவிழாக்கள்,திருமண விழாக்கள்,பார்ட்டிகள் போன்ற விழாக்களிலும் ஒலிபெருக்கியை வைத்து அதிக ஒலியெழுப்பி காதுகளைக் கிழிப்பது இன்றைய நாகரிகமாகிவிட்டது.

முன்பெல்லாம் பஸ் பயணங்கள் சுகமானதாய்த்தான் இருந்தன.இன்று அதிக பேரிரைச்சலோடு செல்லும் பஸ்கள் தான் அதிகமாக உள்ளன.பஸ்களில் உள்ள தொலைக்காட்சிப் பெட்டியில் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளின் ஒலி அளவே பஸ் சாரதிக்கு கவனச்சிதறல் ஏற்படுவதற்கு காரணம்.சாரதியின் கவனச்சிதறலே விபத்துக்கு முக்கிய காரணம் என்று அனைத்து நீதிமன்றத் தீர்ப்புகளிலும் கூறப்பட்டுள்ளன. தொலைக்காட்சி இல்லாத வாகனங்களில் எப்.எம்.ரேடியோக்கள் பொருத்தப்பட்டு 24 மணி நேரமும் இரைந்து கொண்டே இருக்கின்றன.

இதனால் சுகமான பிரயாணம் சோகமான பிரயாணமாக மாறிவிடுகிறது பலருக்கு.

அடுத்து பட்டாசுகள் திருமணவிழா என்றாலும் தலைவர்கள் வருகை என்றாலும் தங்கள் ஆடம்பரத்தைப் பறைசாற்றுவதற்கு மக்கள் தேர்ந்தெடுத்த ஆயுதம் பட்டாசு ஓசையுடன் வெடிக்கும் பட்டாசுகளின் வெடிச்சத்தத்தின் அளவு 125 டெசிபலைத் தாண்டக்கூடாது என்பது விதி. இவை முறையாக பின்பற்றப்படுகிறதா?

அதிக ஒலி தரும் இரைச்சல் மிகவும் தீங்கானது அதிக இரைச்சல் உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் பல துன்பங்களைத் தரும் என டாக்டர்கள் எச்சரிக்கின்றனர்.இதன் பக்கவிளைவாக இதயநோய் மன அழுத்தம் சார்ந்த நோய்கள் ஏற்படும்.நமது காதுகள் 120 டெசிபலைத் தாண்டும்போது காதில் வலி உணரப்படும்.இந்த ஒலி அள்வு கூடும்போது செவிப்பறைக் கிழிந்து காது கேட்காமல் போகும் அபாயம் உள்ளது என்கின்றனர் டாக்டர்கள்.

ஒலி மாசினால் பறவைகளும் விலங்குகளும் கூட பாதிக்கப்படுகின்றன.அதிக இரைச்சல் உள்ள இடங்களை விட்டுவிட்டு தங்களது வாழ்விடங்களை அமைதியான சூழ்நிலைக்கு மாற்றிக்கொண்டு பறவைகள் பறந்து சென்றுவிடுகின்றன.விலங்குகளும் அதிக இரைச்சலால் கோபமுற்று அமைதியான சூழ்நிலையை நோக்கி இடம் பெயர்கின்றனவாம்.

பாவம் மனிதர்கள் நாம் என்ன செய்வது?வேறு இடத்துக்கு மாறிச் சென்றால் அங்கும் அரசியல் கட்சிகள் இருக்கும்.கட்சிக் கூட்டமும் நடைபெறும். ஒலிபெருக்கிகளும் இரையும். கட்சிக்கூட்டம் நடந்தால் இதே தொல்லைதான். சத்தம் காதைக் கிழிக்குது என வேறு மொழியில் வேண்டுமானால் யாராவது புலம்புவதைக் காணலாம்.

செ.சரவணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொன்டலீசா ரைஸை காதலிக்கும் கடாபி

லிபிய அதிபர் முஅம்மர் கடாபியின் வீட்டுக்குள் புகுந்து நடத்தப்பட்ட அதிரடி சோதனையின் போது சிக்கிய ஆல்பம் அனைவரையும் அதிர வைத்துள்ளது.காரணம் அந்த ஆல்பத்தில் அமெரிக்க முன்னாள் வெளிறயுறவு அமைச்சர் கொன்டலீசா ரைஸ் புகைப் படங்களை தொகுத்து வைத்துள்ளார் கடாபி.மேலும் கொன்டலீசா ரைஸ் மீதுதான் காதல் கொண்டிருந்ததையும் அதன் மூலம் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

கொன்டலீசா ரைஸ் மீது காதல் கொண்டவர்கள் பட்டியல் மிகப்பெரியது.அவர் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்தபோது அவரைப் பிடித்திருப்பதாக இத்தாலி வெளியுறவு அமைச்சர் மஸிமோ டி அலீமா,இங்கிலாந்து வெளியுறவு அமைச்சர் ஜேக் ஸ்டிரா உள்ளிட்ட பலரும் வெளிப்படையாகவே கூறியிருந்தனர்.அந்த வரிசையில் கடாபியும் ஒருவராக இருந்திருக்கிறார் என்பது இப்போது தெரிய வந்துள்ளது.

கடாபி ஏற்கனவே 2007 ஆண்டே ரைஸ் மீதான காதலை பகிரங்கமாக வெளிப்படுத்தியவர்தான்.அந்த ஆண்டில் அவர் அல் ஜசீரா ரிவிக்கு அளித்த பேட்டியில் லீஸா,லீஸா,லீஸா நான் அவரை பெரிதும் நேசிக்கிறேன்.எனக்குப் பிடித்த ஆபிரிக்க அழகுப்பெண் அவர் என்று கூறியிருந்தார் கடாபி.

அதற்கு அடுத்த ஆண்டேரைஸ் திரிபோலிக்கு விஜயம் செய்து கடாபியை அவரது இல்லத்தில் சந்தித்தார். அப்போது அமெரிக்கா,லிபியா,இடையிலான உறவில் லேசான மாற்றம் தெரிந்த சமயம்;

இது மட்டுமே ரைஸ் மீதான கடாபியின் பாசமாக இதுவரை வெளியுலகுக்குத் தெரிந்த ஒன்று.ஆனால் ரைஸின் விதம் விதமான போட்டோக்களை ஆல்பம் போட்டு தனது இதயத்தில் புதைந்து கிடந்த காதலை பத்திரமாக பாதுகாத்து வந்துள்ளார்.கடாபி என்பது தற்போது தெரிய வந்து அனைவரையும் ஆச்சரியமடைய வைத்துள்ளது. அந்த ஆல்பத்தில் விதம் விதமான போஸ்களில் ரைஸ் காணப்படுகிறார்.கடாபியுடனான சந்திப்பின்போது எடுக்கப்பட்ட புகைப்படமும் அதில் உள்ளது.

புரட்சிப் படையினர் திரிபோலியை கைப்பற்றியதைத் தொடர்ந்து கடாபி தலைமறைவாகி விட்டார்.இதையடுத்து அவரது வீட்டை புரட்சிப் படையினர் கைப்பற்றி அங்குலம் அங்குலமாக சோதித்து வருகின்றனர். அப்போதுதான் இந்த ஆல்பம் சிக்கியது.

## ஸ்பெயின் மன்னர் எதிர்க்கும் திருமணம்



ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த 85 வயது மூதாட்டி தன்னைவிட 24 வயது இளையவரான 60 வயது நபரை திருமணம் செய்ய முடிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளார்.

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர் மரியா டேல் ரோசரியோ 85 வயதாகும். இந்த மூதாட்டிக்கு சொந்தமாக ஏராளமான அரண்மனை,பங்களா,ஹோட்டல்கள் என கோடிக்கணக்கான சொத்துகள் உள்ளன.இதுவரை 2 ஆண்களை மணந்த மரியாவுக்கு 5 மகன்களும் 1 மகளும் 8 பேரப்பிள்ளைகளும் உள்ளனர்.

சமீபத்தில் இவர்கள் ஒவ்வொருவருக்கும் சொத்துகளைப் பகிர்ந்து கொடுத்த மரியா மீண்டும் திருமணம் செய்ய முடிவு செய்துள்ளார்.அதுவும் தன்னைவிட 24 வயதுஇளையவரான சமூக பாதுகாப்பு துறையில் பணியாற்றும் அரச ஊழியரை மணக்கவுள்ளார். தற்போது 60 வயதை எட்டியுள்ள மணமகன் அல்போன்சோ டிஸ் காராான்பன்டீஸ் உடன் 3 ஆண்டுகளாகப் பழகிய பிறகே மரியா இந்த முடிவிற்கு வந்ததாகத் தெரிகிறது.

எதிர்வரும் அக்டோபர் மாதம் நடத்த திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள இந்த திருமணத்திற்கு மரியாவின் வீட்டினர்,உறவினர்,ஸ்பெயின் மன்னர் ஜுயான் கார்லோஸ்-1 உட்பட பலரும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

திருமண நிகழ்ச்சியில் இடமில்லாமல் போகலாம் என்பதால் தனது நெருங்கிய நண்பர்களுக்கு மட்டுமே அழைப்பு விடுத்துள்ளேன்.ஆனால் திருமண நிகழ்ச்சியின் போட்டோக்கள் அனைத்து ஊடகங்களுக்கும் வழங்கப்படும் என மரியா தெரிவித்துள்ளார்.

மரியா தனது 21 ஆவது வயதில் கடற்படை அதிகாரி ஒருவரை மணந்தார்.இந்த திருமணத்திற்காக 2 மில்லியன் யூரோக்களை செலவழித்தார்.அவரது இறப்பிற்கு பின் 1978 இல் மதபோதகர் ஒருவரை மணந்தார்.அவரும் கடந்த 2001 இல் இறந்தார்.அதன்பின் தற்போது 3 ஆவது முறையாக திருமணம் செய்ய உள்ளார்.மரியா தனது இளம்வயதில் பலமுறை அழகு சிகிச்சைகளை மேற்கொண்டதால் அவரது உடல் பகுதிகள் அதிக பாதிப்படைந்துள்ளதாக தெரிகிறது.

## அமேசன் நதிக்குக் கீழாக ஓடும் இன்னொரு நதி

அமேசன் நதிக்குப் பல ஆயிரம் அடிகள் கீழே பூமிக்கு அடியில் இன்னொரு பெரிய நதி ஓடுவதாக பிரேசில் நாட்டு விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பூமியின் மேற்பரப்பில் அமேசன் சுமார் 6,000 கி.மீ.தூரம் ஓடுகிறது.கிட்டத்தட்ட அதே தூரத்திற்கு பூமிக்கு அடியிலும் ஒரு நதி ஓடுவதாக பிரரேசில் தேசிய ஆய்வு அமைப்பைச் சேர்ந்த வலியா ஹம்சா என்பவர் தெரிவித்துள்ளார்.

1970 ஆம் மற்றும் 80 ஆம் ஆண்டுகளில் அரசு கச்சா எண்ணெய் நிறுவனமான பெட்ரோபாஸ் தோண்டி தற்போது செயலில் இல்லாத 241 எண்ணெய்க் கிணறுகளில் வெப்பநிலை மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதைக் கொண்டு அமேசனுக்குக் கீழ் நதி ஓடுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பெட்ரோபிராஸ் நிறுவனம் அளித்த கிணறுகளின் வெப்பநிலை அளவுகளைக் கொண்டு அமேசனுக்குக்கீழ் பூமிக்கு அடியில் சுமார் 4000 மீற்றர்களுக்கும் கீழ் இன்னொரு நதி ஓடுவது தெரிய வந்துள்ளது என்று கூறினார் ஹம்சா.

பிரேசிலின் ஜியோபிசிக்கல் சொசைட்டியில் கடந்த வாரம் இந்த கண்டுபிடிப்புகள் பற்றி உரை அளிக்கப்பட்டது.

இந்த நதி பற்றிய ஆய்வை நடத்திய ஹம்சாவின் பெயரையே இந்த நிலத்தடி நதிக்கும் வைத்துள்ளனர்.

இந்த நிலத்தடி நதி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஓடுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இருந்தாலும் இந்த ஆய்வு இன்னும் ஆரம்ப நிலையில் இருப்பதாகவும் இது பற்றிய முழு விபரம் 2014 ஆம் ஆண்டு தெரியவரும் என்றும் இந்த ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.



அமேசன் மழைக்காடுகளில் இந்த நதியின் சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார விளைவுகள் என்னவாக இருக்கும் என்பது பற்றி ஹம்சா கருத்துக் கூற மறுத்து விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

0899914.indd 44
Process Cyan Process Magenta Process Yellow

# உணவை விஷமாக்கும் பிளாஸ்டிக்

எச்.ஹுஸ்னா

பிளாஸ்டிக் பொருட்க ளின் பயன்பாடு தொடர்ந்தால் எதிர்காலத்தில் எமது நாடு பிளாஸ்டிக் குப்பை மேடாகவே காட்சியளிக்கும் நிலை தோன்றும். பிளாஸ்டிக் குப்பை மேட்டில் நாம் வாழ்வது மட்டுமன்றி இதனால் பல்வேறு வகையான நோய்களுக்கும் நாம் உள்ளாகி விடுவோம்.

பிளாஸ்டிக்கினால் ஏற்படும் விளைவுகள் பற்றி பல விழிப் புணர்வு செயற்றிட்டங்களை முன்னெடுத்த போதிலும் அன்றாடம் நாம் ஹோட்டல்க ளிலும் வீடுகளிலும் தொழிற் சாலைகளிலும் பிளாஸ்டிக் பொருட்களை உபயோகிக்கின்றோம்.

இன்று வீதியோரக் கடைகள் முதல் ஹோட்டல்கள் வரை உணவுப் பொதி செய்து கொடுக்க பிளாஸ்ரிக் பைகளையே பயன்படுத்துகிறார்கள். எடை குறைவானதும் விலை மலிவானதுமான இந்தப் பொருட்கள், உயிருக்கு உலை வைக்கக் கூடியவை

இரசாயனப் பதார்த்தங்கள் கொண்டு செய்யப்படும் இந்த பிளாஸ்டிக் பைகள், பக்கற்றுகள் பேப்பர்களில் உணவுப் பொருட்களை வைப்பதால் ஒவ்வாமை முதல் புற்றுநோய் வரைவரும் ஆபத்துள்ளதாகவும் பிளாஸ்டிக் தொழில்நுட்ப நிபுணர்கள் கூறுகின்றனர். அத்தோடு, பிளாஸ்டிக் பைகள் பொலித்தீன் எனப்படும் மூலப் பொருளினால் உருவாக்கப் பட்டுள்ளது. இதில் சூடான உணவுப் பொருட்களை வைக்கும்போது, பிளாஸ்டிக் பேப்பர் பைகளில் கலந்துவிடும் இதனால் இதனுள் வைக்கப் பட்டுள்ள உணவு விஷமாகி, உயிருக்கு உலைவைக்கும்நிலையை ஏற்படுத்திவிடும்.

அத்தோடு பிளாஸ்டிக் பைகள், உணவுக்காக பயன்படுத்தும் பிளாஸ்டிக் உபகரணங்கள் 60 டிகிரி சென்றிகிரேட் வரை சூடு தாங்கக்கூடிய வகையில் உருவாக்கப்பட வேண்டும். ஆனால், தற்போது வீதியோரக் கடைகளிலும் ஹோட்டல்களிலும் இதற்கு மாற்றமாக குறைந்த எடையுடைய மெல்லிய பைகளையே உபயோகிக்கின்றதுடன் இதில் 'பொலிஎதிலீன்' மட்டுமல்லாமல் உணவுகள் கெட்டுப்போகாமல் வைப்பதற்காக பிளாஸ்ரிக் போத்தல்களில் வேறு இரசாயனப் பொருட்கள், அமிலங்களையும் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு தயாரிக்கப்பட்டுள்ள பைகளில் உணவுகளைப் பொதிசெய்து விற்பதன் மூலம் இதிலுள்ள இரசாயனப் பதார்த்தங்களினால் உடலில் அரிப்பு ஏற்படல், தடிப்புகள், கொப்புளங்கள், மூச்சுவிடுவதில் சிரமம், ஹோர்மோன் சீராக செயற்படாமை, உணவுக் குழாயில் புற்றுநோய் போன்ற பல நோய்கள் ஏற்பட வாய்ப்புகள் ஏற்படுவதாக வைத்திய நிபுணரொருவர் கூறினார்.

இது தொடர்பாகக் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் டாக்டர் சாந்தி குணவர்தன கூறுகையில்; 'நாம் கடைகளில் வாங்கும் குடிநீர்ப் போத்தல்கள் தரமானவை என கூறப்படுகின்ற போதிலும் அது தயாரிக்கப்படும் போலி கார்பன் ரெசின் களிலிருந்து பிஸ்பெனோல்–ஏ *(Bisphebnol-A)* என்ற இரசாயன பொருள் அந்த பிளாஸ்டிக் போத்தல் மற்றும் பாத்தரங்களில் சேமிக்கப்படும் உணவு மற்றும் தண்ணீருடன் கலக்கப்பட்டு இது மனித உடலில் ஓமோன்களின் உற்பத்தியைத் தடுக்கும் அத்தோடு அவற்றின் உபயோகத்தினால், அதிகூடிய பசி, மனித மலட்டுத்தமைக்கும் மார்பகங்களில் முறையற்ற திசுக்கள் வளரவும் விந்தணுக்களின் எண்ணிக்கை குறையவும் வழிவகுக்குகின்றன.

இதேவேளை, மறுசுழற்சி மூலம் பயன்படும் பிளாஸ்டிக்கின் மூலம் அதிலிருந்து வெளியாகும். ஹைட்ரோ கார்பன்கள் மூலம் தோல் நோய்களுக்கும், மூச்சுக்குழல் நோய்களுக்கும் வழிவகுக்கின்றதுடன், பாவிக்கப்பட்ட பிளாஸ்டிக் பைகளை எரிக்கும் போது, அவற்றிலிருந்து 'டயக்சின்' என்ற நச்சுத் தன்மை வாய்ந்த வாயுக்கள் வெளியாகின்றன. அவை மனித உயிரினங்களுக்கு அழிவைத் தரக்கூடியவையாகும். இந்த வாயுக்கள் மூலம் புற்று நோய் ஏற்படுகிறது. பிளாஸ்டிக் தயாரிப்பின்போது உருவாகும் எதிலின் ஒச்சைட் *(Ethylene Oxide)*, பென்சன் *(Benzene)*, எக்ஸ்சைலன்ஸ் *(Xylenes)* போன்றவையினால் குழந்தைகள் பிறக்கும் போதே குறைபாடுகளுடன் பிறப்பதற்கும் வெவ்வேறு வகையான புற்றுநோய் உருவாவதற்கும் வழி வகுப்பதாகவும் வைத்திய நிபுணர் மேலும் கூறினார்.

ஒரு பிளாஸ்டிக் பொருள் உக்குவதற்கு 100 ஆண்டு முதல் 1000 ஆண்டு வரை செல்லும் ஒரு பிளாஸ்டிக் பையானது மக்களால் சராசரியாக பயன்படுத்தப்படும் நேரம் வெறும் 20 நிமிடங்கள் மட்டுமேயாகும். இதேவேளை நாம் பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களில் 7 சத விகிதமானவை மாத்திரமே மறு சுழற்சி மூலம் திரும்பப் பயன்ப டுத்த முடியும் தன் மையு டையது. வளர்ச்சி யடைந்த நாடு களில் ஒரு நபர் ஆண்டுக ளுக்கு சராசரியாக 25 கிலோ பிளாஸ்டிக் பொருட்களை பயன் படுத்துகிறார். வளர்ந் துவரும் நாடுகளில் ஒருவர் ஆண்டுகளுக்கு சராசரியாக அதன் இருமடங்கு பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத் துவதாக ஆய்வுகள் தெரி விக்கின்றன. அத்தோடு உலகில் ஆண்டுதோறும் 30 இலட்சம் தொன் எடையுள்ள பிளாஸ்டிக் போத்தல்கள் பயன்ப டுத்தப்பட்டு வருகின் றன. இவற்றில் அதிக மானவை பூமியில் வீசி எறியப்படுகின்றன. இதனால் சூழல் அதிகளவு மாசடை கின்றது. பிளாஸ்டிக் பொருட்களிலிருந்து வெளியாகும். பிஸ்பினோல்–ஏ என்ற அமிலம் மனிதனின் மூளையின் செயற்பாடுகளையும் மன நிலையையும் பாதிக்கச் செய்யும் தன்மை கொண்டதாக இருக்கிறது. இதனை கருத்திற்கொண்டு சில நாடுகள் பிளாஸ்டிக் பொருட்களின் பாவனையை முற்றாகத் தடை செய்துள்ளது. ஆனால், எமது நாட்டில் பிளாஸ்டிக் பொருட்களின் பாவனை கட்டுப்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை.

எனவே, பிளாஸ்டிக் பொருட்களின் பாவனையை வெறு மனே தடை செய்து விழிப்புணர்வுக் கூட்டம், கருத்தரங்கு, ஆர்பாட்டங்களை நடத்துவதால் மாத்திரம் பிளாஸ்டிக் பாவனையாளர்களின் எண்ணிக்கையை குறைக்க முடியாது. ஒவ்வொருவரும் ஆபத்தை உணர்ந்து கொள்வதன் மூலமே இதனை இல்லாதொழிக்க முடியும்.

மேலும் உணவகங்கள், ஹோட்டல்களில் பயன் படுத்தப்படு கின்ற பிளாஸ்டிக் பொலித்தீனை தவிர்த்து, கடதாசி சனல் பைகளையும் வாழை இலை, அலுமினியப் பொருட்களையும் பயன்படுத்துவதன் மூலம் நோய்களற்ற எதிர்கால சந்ததியினரை உருவாக்க முடிகின்ற அதேவேளை, மாசற்ற தேசத்தையும் உருவாக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவம்



# எமனை ஏரோபிளேனில் வரவைக்கும் காலை புகைப்பழக்கம்

**பொதுவாகவே சிகரெட் பிடிப்பது, உயிருக்கு உலை வைக்கக் கூடிய ஆபத்தான பழக்கம் என்று மருத்துவர்கள் எச்சரிப்பது ஒருபுறம் இருக்க, காலையில் எழுந்தவுடன் புகை பிடிப்பது என்பது எமனை எருமை மாட்டில் வரவழைப்பதற்கு பதில் ஏரோப்பிளேனில் வரவழைத்துவிடும் என்று எச்சரிக்கிறார்கள்** மருத்துவ ஆய்வாளர்கள்.

இது தொடர்பாக அமெரிக்க மருத்துவக் கல்லூரி ஒன்று நடத்திய ஆராய்ச்சியில் காலையில் எழுந்ததும் புகை பிடிப்பதினால் நுரையீரல், கழுத்து மற்றும் தலையில் புற்றுநோய் வருவதற்கான ஆபத்து மிக அதிகமாக உள்ளதாகத் தெரியவந்துள்ளது.

புகை பிடிக்கும் பழக்கம் உள்ளவர்களில் பலர், காலையில் எழுந்ததுமே டாய்லட்டுக்குள் புகுந்துகொள்வார்கள். உள்ளே போய் ஒரு சிகரெட்டை பற்ற வைத்தால்தான் அவர்களுக்கு காலைக்கடனே கழியும். சிலர் இதனைப் பெருமையாக வேறு கூறிக்கொள்வார்கள். அத்தகைய பீற்றல்காரர்களுக்குத்தான் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர் மேற்கூறிய மருத்துவக்கல்லூரி ஆராய்ச்சியாளர்கள்.

இவ்வாறு காலையில் எழுந்ததும் புகைபிடிப்பவர்களது உடலில் நிகோடின் மற்றும் இதர புகையிலை நச்சுக்கள் மற்ற நேரங்களில் புகை பிடிப்பவர்களைக் காட்டிலும் அதிகமாகக் காணப்படுகின்றன. அத்துடன் புகைப் பிடிக்கும் மற்றவர்களை விட இவர்கள்புகை பிடிக்கும் பழக்கத்திற்கு மிக அதிகமாக அடிமையாக உள்ளதாகவும் அந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

நுரையீரல் புற்று நோய் தொடர்பாக அந்நோய் பாதித்த 4,775 பேரிடம் நடத்தப்பட்ட ஆய்வில், அவர்கள் அனைவருமே காலையில் எழுந்ததும் வழக்கமாக சிகரெட் புகை பிடிக்கும் பழக்கம் உள்ளவர்களாகவே இருந்துள்ளது தெரிய வந்துள்ளதாக கூறுகிறார் இந்த ஆய்வை மேற்கொண்ட மருத்துவ பேராசிரியர்களில் ஒருவரான பென்.

இதேபோன்று தான் தலை மற்றும் கழுத்தில் புற்றுநோய் தாக்கியவர்களுக்கும் மற்ற நேரங்களில் அதாவது காலையில் எழுந்து ஓரிரு மணி நேரம் கழித்து புகை பிடிப்பவர்களைக்காட்டிலும் அதிக நோய்த் தாக்கம் இருப்பது தெரியவந்துள்ளது.

மொத்தத்தில், சிகரெட் பிடிப்பதே உடல் நலத்திற்கு கேடு என்று இருக்கும் போது காலையில் எழுந்தவுடன் மட்டுமல்லாது நிரந்தரமாகவே புகைபிடிப்பதை கைவிட்டுவிடலாமே.

## இளமையை நீடிக்கும் யோகா

**யோகாசன பயிற்சியால் உடல் எடை குறையாது என்று பலர் கூறுவார்கள்.ஆனால்,அது மிகவும் தவறு உடல் எடை குறைவு மற்றும் உடல் கட்டுக்கோப்புக்கு யோகா மிகவும் அத்தியாவசியமானது.யோகாவின் உதவியால் உடலை கட்டுக்குலையாமல் பாதுகாக்க முடியும் என்கிறார் இந்தியப் பிரபலங்களின் யோகா பயிற்சியாளர் பாயல் கித்வானி திவாரி.அவர் தனது யோகா அனுபவங்கள் குறித்து புத்தகம் ஒன்றையும் எழுதியுள்ளார்.அந்த புத்தகத்தில் இடம்பெற்றுள்ள முக்கிய குறிப்புகளை இங்கே பார்ப்போம்.**

நாம் தன்னம்பிக்கையுடன் முன்னோக்கி செல்லும் ஆற்றலை நமக்கு கொடுக்கிறது.யோகா பயிற்சி. தினமும் தவறாமல் பயிற்சி செய்தால் கோபம்,எதிர் மறை எண்ணங்கள் கட்டுப்படும்.

யோகா உடலில் உள்ளுறுப்புகளை சுறுசுறுப்பாக இயங்க வைக்கும்.இதன் மூலம் உடல் உறுப்புகள் அனைத்தும் சீராக இயங்கி ஆரோக்கியம் மேம்படும்.யோகா பயிற்சியின் போது சரியான வழியில் மூச்சுப் பயிற்சியை மேற்கொண்டால் சுவாசம் ஒழுங்காக இயங்க ஆரம்பிக்கும்.இதனால் உங்களது இளமையின் காலம் நீடிக்கும்.

யோகாசனம் செய்யும்போது உடல் உறுப்புகளின் அசைவுகளினால் இரத்த ஓட்டம் அதிகரிக்கும்.இதனால் இரத்தம் அனைத்து உறுப்புகளுக்கும் பாய்ந்து அவற்றின் இயக்கம் சீராகும்.மற்ற பயிற்சிகளைவிட யோகாவில் மட்டுமே இரத்த ஓட்டம் முகம் மற்றும் சருமத்தின் மீதும் பாய்ந்து உடல் அழகை பாதுகாக்கிறது.இதனால் ஆஸ்துமா,சைனஸ் போன்ற பிரச்சினைகள் குணமடையும்.

யோகா உடம்பை சீராக,கட்டுக்கோப்பாக மாற்றுவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.உடல் பருமனாக இருப்பவர்களில் அனைவருக்குமே உடல் முழுவதுமு கொழுப்பு சேர்ந்திருக்க வாய்ப்பில்லை.சிலருக்கு இடுப்பில் சிலருக்குத் தொடையில் சிலருக்கு முதுகில் சிலருக்கு அடிவயிற்றில் சிலருக்கு மேல் வயிற்றில் சிலருக்கு மார்பில் பருமன் வெவ்வேறு வடிவில் இருக்கும். குறிப்பிட்ட யோகாசனத்தை மட்டும் செய்தால் போதும் உடல் முழுவதும் ஒரே மாதிரியாக சீராகும்.

நீங்கள் எந்த அளவுக்கு எத்தனை நிமிடத்திற் யோகாசனம் செய்கிறீர்களோ அதைப் பொறுத்து உங்களுடைய உடலில் இருக்கும் தேவையற்ற கொழுப்பு கரைந்து உடல் பருமன் குறையும்.அதேநேரத்தில் உணவுக்கட்டுப்பாடு.உடற்பயிற்சியால் உடல்எடை குறையும்போது ஏற்படும் சோர்வு யோகாவில் இருக்காது என்பது உறுதி.மேலும் செயற்கையைத் தவிர்த்து எவ்வித பிரச்சினையும் இல்லாமல் இயற்கையாக உடல் எடை குறைய யோகா மட்டும் சிறந்த வழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயதானவரை விரும்பும் பிரியங்கா



பொலிவூட்டின் அழகு தேவதை பிரியங்கா சோப்ரா. இவரிடம் 'நடிகரை திருமணம் செய்வதென்றால் யாரை தேர்வு செய்வீர்கள்?' என்று கேட்டதற்கு சற்றும் யோசிக்காமல் 'திலிப்குமாரை திருமணம் செய்து கொள்வேன்' என்றார்.

திருமணமாகாத இளம் நடிகர்கள் ஏராளமானவர்கள் இருக்கும்போது எழுபது வயது திலிப்குமாரை ஏன் திருமணம் செய்ய ஆசைப்படுகிறீர்கள்? என்று கேட்டதற்கு 'அவர் தனது மனைவி சாய்ரா பானு மீது கொண்டிருக்கும் பாசம்தான் என்னை அப்படி பேசவைக்கிறது.அவர்கள் இருவருக்கும் வயது இடைவெளி நிறைய இருந்தபோதிலும் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள்.அதனால் தான் அவர்கள் மீது அன்பால் பொறாமைப்பட்டு அப்படிச் சொன்னேன்' என்றார்.


பொலிவூட் நடிகர் சாஹித் கபூருடன் உங்கள் நட்பு எப்படி இருக்கிறது? என்று அடுத்த கேள்வியைக் கேட்டால், அவரோடு சேர்ந்து பணியாற்றும்போது நேரம் போவதே தெரியாது. எல்லாம் நன்றாகத்தான் போகிறது. அதற்கு மேல் எதைச் சொல்வது என்று தெரியவில்லை என்கிறார்.

உங்களுக்கு வரப்போகும் கணவர் எப்படி இருக்க வேண்டும்? என்று கேட்டால் அவரது கனவுக் கணவரின் குணங்களை அடுக்குகிறார். 'அவர் அழகான, கவர்ச்சியாக,ஜாலியான, புத்திசாலியான,ஆரோக்கியமான ஆளாக இருக்க வேண்டும்' என்கிறார்.

பிரியங்கா சோப்ரா முதன் முதலில் தமிழ்ப் படத்தில் தான் நடித்தார். அந்தப் படம் தமிழன். விஜய்க்கு ஜோடியாக நடித்திருந்தார். இவர் படிக்கும்போது என்ஜினியர் ஆக ஆசைப்பட்டார்.இவரது அம்மா மிஸ் இந்தியா போட்டிக்கு பிரியங்காவின் போட்டோக்களை அனுப்பினார். உலக அழகி பட்டமும் வென்றுவிட்டு பொலிவூட் படங்களில் கலக்கி வருகிறார்.

டேட்டிங் போவீர்களா? என்று கேட்டால் இவரிடம் இருந்து வித்தியாசமான பதில் வருகிறது. 'டேட்டிங் செல்ல விருப்பம் இல்லை. ஆனால் யார் மீதாவது நான் காதல் வசப்பட்டு விட்டால், அவர் வீட்டில் இரவில் வீடு முழுக்க மெழுகுதிரி வெளிச்சத்தில் நாங்கள் இரண்டுபேரும் பேசிக் கொண்டே இருக்க வேண்டும் என்பதே என் ஆசை' என்கிறார்.

# வித்தியாசமான ஜோடி



அமெரிக்கக் கூடைப் பந்து நட்சத்திரமான ஷக்கில் ஓநீலையும் அவரது மனைவி நிக்கோல் அலெக்சாண்டரையும் முதன் முதலில் பார்ப்பவர்கள் வியந்து போகிறார்கள். காரணம் ஷக்கில் சராசரிக்கும் அதிகமாக 7 அடி 1 அங்குல உயரம். நிக்கோலோ சராசரிக்கும் குறைவாக ஐந்தடி உயரம்.

பெரும் உயர வித்தியாசம் இருந்தாலும் சந்தோஷமாக வாழ்க்கை நடத்துகிறது இந்த ஜோடி. அதற்குச் சான்றாக சமீபத்தில் கலிபோர்னியாவின் கலாபசாஸ் நகரில் கரம் கோர்த்து உலா வந்தனர் இவர்கள். தங்களை வியப்போடு பார்ப்பவர்களை இத்தம்பதி ஒரு பொருட்டாகவே கருதுவதில்லை.

# கிளிக்கு பிடித்த வோர்ன்




அவுஸ்திரேலிய கிரிக்கெட் முன்னாள் சுழல் புயல் ஷேன் வோர்னின் புதிய துணை, எலிசபெத் ஹர்லி.இவரது செல்லக்கிளியான 'பிங் பாங்'தக்தும் வோர்னேயை ரொம்பப் பிடித்து விட்டதாம். வோர்ன் அதிகாரம் செலுத்தக் கூடிய ஆள் என்றபோதும் அதையும் தாண்டி தனக்த அவர் மீது காதல் பிறந்து விட்டது என தனது 'டுவிட்டர்' பக்கத்தில் 'பிங்பாங்' எழுதியுள்ளது.



'ஆமாம், என் இனிய அவுஸ்திரேலியரே, எனக்த இன்னும் உங்கள் மீதான காதல் மயக்கம் மாறவில்லை.நீங்கள் எனது எஜமானியை (எலிசபெத் ஹர்லி) விட அதிகாரத்தோடு நடந்து கொள்கிறீர்கள்.ஆனாலும் எனக்த உங்களைப் பிடித்து விட்டது' என்று 'பிங் பாங்' தறிப்பிட்டுள்ளது.

முன்புறம் நீல நிறம் உடைய இந்த அமேஷோனியன் வகை கிளிக்த டுவிட்டரில் 5 ஆயிரம் ரசிகர்கள் இருக்கிறார்கள். அதெல்லாம் சரி, கிளி எப்படி எழுதும் என்கிறிர்களா? கிளி சார்பில் எழுதுபவர் எலிசபெத் ஹர்லிதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அக்கம் பக்கம்

## பிரித்துவிடும் தொழில்

திருமணம் செய்யாமல் சேர்ந்து வாழும் 'லிவிங் டு கெதர்' வாழ்க்கை முறை பற்றி கேள்விப்பட்டு இருப்பீர்கள். பெருநகரங்களில், குறிப்பாக தகவல் தொழில்நுட்பத் துறையில் பணிபுரிபவர்களிடையே இந்தப் பழக்கம் அதிகரித்து வருகிறது.

கேட்கவே திகைப்புக்குரிய இந்த வாழ்க்கை முறை, இப்போது இன்னும் மலைக்க வைக்கும் மாற்றங்களுடன் சென்றுகொண்டிருக்கிறது.

'லிவிங் டு கெதர்' முறையில் சேர்ந்து வாழும் ஜோடிகள் முன்பெல்லாம் யாருக்காவது பணியிட மாறுதல் கிடைத்தால் மட்டுமே பிரிய மனமின்றி பிரிந்து செல்வார்கள். இப்போது அப்படியில்லை. ஒரு சில ஆண்டுகளுக்கு மேல் சேர்ந்து வாழ்வதில்லை. மீண்டும் ஒரு புதிய துணையுடன் சேர விரும்புகிறார்கள். அப்போது பழைய துணையை எப்படி வெட்டிவிடுவது என்று தெரியாமல் தவிக்கின்றார்கள்.

அந்த 'லிவிங் டுகெதர்' ஜோடியில் பெண்ணின் வயது 25. நல்ல அழகும், அந்தஸ்தும் உடையவர். ஒரு வருட, வாழ்க்கையில் சலிப்பு ஏற்பட்டுவிட, தன் ஜோடியை கழற்றிவிட்டால் நல்லது என்ற எண்ணம் அவளுக்கு ஏற்பட்டது. 'பிரிந்து போய்விடுவோம்' என்று அவனிடம் நேரடியாக சொல்ல அவளுக்கு தைரியமில்லை. தன் கல்லூரி தோழி ஒருத்தியிடம் விஷயத்தைக்கூறி, அவருடனான உறவை வெட்டிவிட ஏதாவது ஒரு வழி சொல் என்றாள். உடனே அவள் குருட்டாம் போக்கில் ஒரு ஐடியாவைக் கூறி, தானே அதை செயல்படுத்தி, பிரிவை ஏற்படுத்திவிடுவதாகவும் சொன்னாள். 'நீ நன்றாக நடித்து பிரச்சினை எதுவும் செய்யாமல் அவன் என்னிடம் இருந்து பிரிந்துவிட்டால் உனக்கு ஐம்பதாயிரம் ரூபா தந்து விடுகிறேன்' என்றாள். கல்லூரித் தோழி மகிழ்ச்சியோடு அதை ஏற்றுக்கொண்டாள்.

மறுநாள் அவள், தோழியின் துணைவரைப்போய் சந்தித்தாள். அறிமுகம் ஆகிக்கொண்டார்கள் இருவரும். ஓரிரு நாட்கள் கழித்து மீண்டும் தனியாக சந்தித்தார்கள். செல்போனில் தொடர்ந்து பேசினார்கள். பேச்சை அவள் செக்ஸ் பக்கம் திருப்பினாள். நேரடியாக சந்திக்கும் போது நெருக்கமாக நடந்துகொண்டாள். அதை எல்லாம் இன்னொரு பெண் மூலமாக படமாக்கி, பேரம் பேசிய தோழி கையில் கொண்டு கொடுத்துவிட்டாள்.

அவள் அந்த ஆதாரத்தை எடுத்துக்கொண்டு, தன் துணையிடம் ஓடினாள். ''நீங்கள் வேறு ஒரு பெண்ணுடம் பழகுகிறீர்கள் என்னை ஒதுக்குகிறீர்கள்?' என்று வாக்குவாதம் செய்து பிரச்சினையை கிளப்பினாள். 'அப்படியொன்றுமில்லை' என்று துணைவர் சொல்லிப் பார்த்தும், கெஞ்சிப் பார்த்தும் பயனில்லை. ''நீங்கள் எனக்கு துரோகம் செய்துவிட்டீர்கள். அதனால் பிரிந்துவிடுவோம்'' என்று கூறிவிட்டு அவள் பிரிந்து தனியாகப் போய்விட்டாள். பிரச்சினையின்றி பிரிவு நிகழ்ந்ததால், பேசிய தொகை அந்த 'நடிப்பு' தோழிக்கு கைமாறியது.

நடிப்பு தோழி 'சைலன்ட்டாக' அடுத்த கட்டத்திற்கு தாவினாள். யாரை பிரித்துவிட்டாளோ, அந்த இளைஞரிடம் போனாள். அவன் சோகத்தில் இருந்தான். ஆறுதல் கூறினாள் 'என்னால்தானே இப்படி ஆனது. உண்மையில் நான் உங்களிடம் பழகிய நாட்கள் எனக்கு சொர்க்கம் போல் தோன்றியது. நீங்கள் அவளைப் பிரிந்த சோகத்தில் இருந்து விடுபடும் வரை உங்களுக்கு நான் 'கம்பனி' கொடுக்கிறேன்' என்றாள். அவனும் சம்மதிக்க, அவனிடம் இருந்து கொண்டே அவனது வருமானத்தில் ஒரு பகுதியை தன் செலவுக்காக பெற்றுக்கொண்டிருந்தாள்.

இந்த நிலையில், முதல் தோழி மீண்டும் இவளை சந்தித்து, 'தன் தோழிகளில் சிலர் தங்கள் 'லிவிங் டு கெதர்' துணைகளிடம் இருந்து பிரிய நினைக்கிறார்கள். முதலில் நடித்தது போல் நடித்து காரியத்தில் இறங்கு. உனக்கு நிறைய பணம் கிடைக்கும் என்று, ஐ.டி.யில் சம்பாதிக்கும் சில அழகுத் தோழிகளை அறிமுகம் செய்துவைத்தாள்.

ஆஹா இது சூப்பர் தொழில் ஆச்சே..! என்று நினைத்த அவள், தன் உதவிக்கு சில பெண்களை சேர்த்துக்கொண்டு, 'பிரித்து விடும்' இந்த 'புதிய தொழிலில்' இறங்கி விட்டாள். இப்போது அவள் மாதத்திற்கு நாலைந்து ஜோடிகளை பிரிப்பதாக மகிழ்ச்சியோடு சொல்லிக் கொண்டிருக்கிறாள். எப்படி எல்லாம் தொழில் நடக்குது பார்த்தீங்களா?!

எதுக்குங்க இப்படி ஒரு லிவிங் டுகெதர் வாழ்க்கை!

## திகில் படங்களை பார்த்து பெண்கள் அலறுவது ஏன்?


திகில் படங்களைப் பார்த்தால் ஏன் பெண்கள் பயப்படுகிறார்கள் என்று சிந்தித்ததுண்டா? அதற்குக் காரணம் பெண்களின் மூளை தான் என்று ஒரு ஆய்வு தெரிவித்துள்ளது.

திகில் படங்கள் பார்த்தால் பெண்கள் வீல் என்று கத்துவது வழக்கம். கிரீச்சிட்ட பீதியுடன் திகில் படம் பார்க்கும் பெண்கள் அதிகம். திகிலூட்டும் எந்த விடயத்துக்குமே ஆண்களை விட பெண்கள் அதிகம் பயப்படுகிறார்கள். இதற்கு என்ன காரணம், பெண்கள் மட்டும் ஏன் பயப்படுகிறார்கள் என்று லண்டனைச் சேர்ந்த பல்கலைக்கழகமொன்றின் ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வில் சுமார் 30 ஆண்களும், பெண்களும் கலந்து கொண்டனர்.

அவர்களிடம் அழகான இயற்கைக் காட்சி புகைப்படங்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் நிறைந்த புகைப்படங்களும் காண்பிக்கப்பட்டன. அழகான படங்களைப் பார்க்கும் போது சிரிக்க வேண்டும் என்றும், வன்முறைப் படங்களைப் பார்க்கையில் முகத்தைச் சோகமாக வைத்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டார்கள். அதன் பிறகு அவர்களின் நினைவாற்றல் பரிசோதிக்கப்பட்டது.அதில் பெண்கள் அழகான,அமைதியான விடயங்களை எதிர்கொள்வதை விட வன்முறை உள்ளிட்ட மோசமானவற்றைப் பார்க்கும்போது அவர்களின் பய உணர்வுகள் அதிகரிப்பது தெரிய வந்தது.

அடுத்து திகில் படம் வரப்போகிறது என்ற எதிர்பார்ப்பு ஆண்களை விட பெண்களுக்கே அதிகம் இருப்பதால் அவர்களின் மூளை [illegible] அதீத அச்சத்திற்குள்ளாகின்றனர்.அதனால் தான் பயப்படுகிறார்கள்.ஆனால் ஆண்கள் அவ்வாறு எதிர்பார்ப்பதில்லை. வரட்டும் பார்க்கலாம் என்றிருக்கின்றனர்.

இது குறித்து ஆய்வுக்குத் தலைமை தாங்கிய டாக்டர் கியூலியா கல்லி கூறியதாவது;பெண்கள் திகில் படங்களைப் பார்க்கையில் எப்பொழுது திகில் காட்சி வரும் என்ற எதிர்பார்ப்பிலேயே இருப்பார்கள். ஒரு வகையான இசை வந்தால் உடனே திகில் காட்சி வரப்போகிறது என்று நினைத்துக் கொள்வார்கள். இது அவர்கள் மூளையில் பதிந்துவிடுகிறது. ஆனால் ஆண்கள் அப்படியில்லை. கெட்டவைகளை எதிர்பார்ப்பது, அவற்றை நினைவில் வைத்துக் கொள்வது தான் பயத்திற்கு காரணம் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பாராத முத்தம்!

கிருங்கை சேதுபதி

'எதிர்பாராத முத்தம்' என்ற தலைப்பைப் பார்த்தவுடன் பாரதிதாசனின் நூல் இது என்று நினைவுக்கு வருகிறதா? உண்மைதான். இத்தலைப்பு பாரதிதாசனோடு தொடர்புடையது என்றாலும் இக் கட்டுரை அந்நூல் பற்றியதல்ல.இது என்ன புதிர்...? தொடர்ந்து படியுங்கள் புரியும்.

1963 ஆம் ஆண்டு பாரதிதாசனைச் சந்திப்பதற்காக மூன்று பேர் சென்று கொண்டிருந்தார்கள். ஒருவர் கவிஞர் பொன்னடியான், மற்றொருவர் சோமையா என்னும் பதிப்பாளர் .மூன்றாமவர் அவருக்காகத்தான் அவர்கள் இருவருமே பாரதிதாசனைச் சந்திக்கப் போகிறார்கள். அவர் ஒரு கவிஞர். இளம் பேராசிரியரும் கூட. அவர் புதிதாக ஒரு கவிதைத் தொகுப்பு நூலை வெளியிட இருந்தார். அதற்குப் பாரதிதாசனிடம் முன்னுரை பெறத்தான் அம்மூவரும் பாரதிதாசனைப் பார்க்கச் சென்றனர்.

பாரதிதாசன் படுக்கையில் ஓய்வாகப் படுத்திருந்தார்.வணக்கம் கூறி வந்த நோக்கத்தைச் சொல்லிக் கவிஞரை, பாரதிதாசனுக்கு அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தபோது, முன்னுரை பெறவந்த கவிஞருக்குத் தமது வகுப்பறை நினைவுக்கு வந்துவிட்டது.

பாரதிதாசனின் மாணவரும், தமது பேராசிரியருமான ஒருவர் உணர்வு கொப்பளிக்கப் பாரதிதாசனின் பாடல்களைச் சொல்லி அதற்குள் புதைந்திருக்கும் கவித்துவத்தை புரட்சிப்பாங்கை விளக்கிக் கொண்டிருந்த காட்சி மனதுக்குள் கவியத் தொடங்கியது. தம்மை ஒரு கணம் உற்றுப்பார்த்த பாரதிதாசனை நோக்கி 'வணக்கம், நான் பேராசிரியர் மு.அண்ணாமலையின் மாணவன்' என்று கரங்குவித்தார் அந்த இளங்கவி. கேட்டவுடன் படுக்கையில் படுத்திருந்த பாரதிதாசன் எழுந்து உட்கார்ந்தார். இளங்கவியைப் பக்கத்தில் அழைத்தார். 'அப்ப நீ என்னுடைய மாணவனுக்கு மாணவன்னு சொன்னா, நீ எனக்கு பேரன்' என்று மகிழ்ந்து சொன்னபடி அந்த இளங்கவியின் நெற்றியில் முத்தமிட்டார்.

பாரதிதாசனின் எதிர்பாராத முத்தத்தால் மெய்சிலிர்த்துப்போனார் இளங்கவி. முன்னுரை பெறவந்த தமது கவிதைத் தொகுப்பை அவரிடம் கொடுத்தார்.பாரதிதாசன் தருவதாக இசைந்து மறுநாள் அவர்களை வரச்சொன்னார்.

மறுநாள் மிகவும் பயந்தபடி அந்த இளங்கவிஞர் தமது நண்பர்களுடன் பாரதிதாசனைப் பார்க்கப் போனார்.காரணம் பாரதிதாசன் பலருக்கு எழுதிய முன்னுரைகளைப் படித்த அனுபவம்.

அண்மையில் அவரது முன்னுரை ஒன்றில், இந்தக் கவிதைகளைத் திருத்திப் படித்துக் கொள்ளலாம் என்ற விமர்சனத்தோடு பாரதிதாசன் எழுதியிருந்தார். அதுபோல்,தமது நூலுக்கு எப்படி எழுதியிருப்பாரோ என்று சற்றே பயந்திருந்தார் இளங்கவி. ஆனபோதும் நமது காலத்தில் வாழுகிற ஒரு பெருங்கவி பாரதியாரைத் தரிசித்தவர்.அவரது பேரன்புக்குப் பாத்திரமான சீடர்.எனவே அவர் என்ன எழுதியிருந்தாலும் சரி,பெற்றுக்கொள்வோம் என்று நினைத்துக் கொண்டார். பாரதிதாசன் அக்கவிஞரின் நூலுக்குத் தாம் எழுதியிருந்த முன்னுரையைக் கொடுத்தார். எழுத்து, கொஞ்சம் கோணல் மாணலாக இருந்ததால் பிரதி எடுத்துக் கொள்ளச் சொன்னார்.

வியப்பும், மகிழ்வும் தரும்படி அமைந்த முன்னுரைக் கவிதையைத் தம் அழகான கையெழுத்தில் படியெடுக்கத் தொடங்கினார் இளங்கவி.

**'அண்ணா மலைப்பல்**
**கலைக்கழகப் பேராசான்**
**அண்ணா மலைஎன் அரி**
**யதமிழ் மாணவனின்**
**கண்ணான மாணவன்**
**நான் என்று கழறித்தம்**
**கையெழுத்துப் படியைக்**
**கண்ணுக் கெதிர்வைத்தே**
**அண்டியசீர்ப் பொள்ளாச்**
**சிக் கல்லூரி ஆசான்நான்**
**அரிய நிலவுப்பூக்**
**கவிதை நூல் நான் செய்**
**தேன்**
**கண் செலுத்த வேண்டு**
**மென்றார்**
**மாட்டேனென் றாசொல்**
**வேன்**
**கவிதை ஒவ்வொன்றும்**
**அமிழ்தாக நான்கண்டேன்**
**பாட்டுத் திறம் கண்டேன்**
**பாலசுப்பிர மணியப்**
**பாவாணர் செய்தஅப் பச்**
**சைத் தமிழ்நூலில்**
**நாட்டுத் திறம்என்னே நாற்**
**கவியும் முத்தமிழும்**
**நல்கும் பயன்என்னே**
**நாவூறிப் போனேன் நான்**
**வீட்டிற் குறட்டைவிட்ட**
**செந்தமிழர் கண்விழிக்க**
**வெற்றி இலக்கியத்தை**
**அன்றளித்த பாரதிபோல்**
**பாட்டை திறக்க வந்த**
**பாலசுப் பிரமணியப்**
**பைந்தமிழ்ப் பாவாணர்**
**புகழ்பெற்று வாழியவே'**

என்று முடித்திருந்தார்.நெகிழ்ந்தபடி படியெடுத்த இளங்கவி ஒரு தமிழ்ப் பேராசிரியரும் ஆனபடியால் 'பாட்டை திறக்க வந்த' என்ற இடத்தில், இலக்கணப்படி வல்லொற்று(த்) மிகும் என்பதால், பாட்டைத் திறக்க வந்த என்று பிரதியில் எழுதிப் பாரதிதாசனிடம் நீட்டினார்.

வாங்கிப் பார்த்த பாரதிதாசன் 'நான் என்ன எழுதியிருக்கேன்? நீ என்ன எழுதியிருக்கே?' என்று செல்லமாகக் கடிந்து கொண்டு அந்த 'த்'ஐ அடித்துவிட்டு, பாரதி போல், 'பாட்டை -பாதை திறக்க வந்த பாலசுப்பிரமணியம் என்றல்லவா எழுதியிருக்கிறேன் என்றார்.




நெகிழ்ந்துபோனார்' இளங்கவிஞர்.

பாரதிதாசன் வாக்குப் பொய்க்கவில்லை. பாரதி மரபில் தமது இலக்கியப் பயணம் தொடர்ந்து தமக்கெனத் தனிநடையுடைய கவிஞராய், இனிய மொழிபெயர்ப்பாளராய், கட்டுரையாளராய், கவிதை, காவியம், கவிதை நாடகம், சிறுவர் பாடல்கள்,ஆத்திசூடி என்று பாரதியார் போல் படைப்பு பல படைத்து பல விருதுகளும் பெற்ற அவர் ஆண்டுதோறும் தமது பெயரில் கவிஞர்களுக்கு விருதளித்து இன்று பவளவிழா காணுகிறார். அந்தக் கவிஞர் வேறுயாருமல்ல, சிற்பி பாலசுப்பிரமணியம் தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீக்குச்சி எரியும் இரகசியம்

தீப்பெட்டியின் பக்கவாட்டில் உள்ள பக்கங்களில் உராய்ந்ததும் தீக்குச்சி எரிய ஆரம்பித்து விடுகிறது.இதற்கு காரணம் என்ன என்று தெரியுமா?

தீக்குச்சியின் தலையில் உள்ள மருந்தானது சல்பர்,பொட்டாசியம் குளோரேட்,கண்ணாடிப் பொடி ஆகியவை கலந்த பசையால் ஆனது. தீப்பெட்டியின் இரு பக்கங்களிலும் பொஸ்பரஸ், கண்ணாடிப்பவுடர் அல்லது மணலுடன் கலந்து பசையானது பூசப்பட்டிருக்கும். தீக்குச்சியின் தலையைப் பெட்டியில் உள்ள இந்தப் பக்கங்களில் தேய்க்கும் போது உராய்வின் மூலம் வெப்பம் வெளியேறுகிறது.

இந்த வெப்பம் பொஸ்பரசை ஆவியாக்கி எரியவைக்கிறது.இதில் இருந்து வரும் வெப்பத்தால் தீக்குச்சி மருந்தில் உள்ள பொட்டாசியம் குளோரேட், ஓட்சிசனை விடுவிக்கிறது. உடனே, சல்பர் பற்றிக் கொள்கிறது. தீக்குச்சி எரியும் இரகசியம் இதுதான்.



## குறுக்கெழுத்துப்போட்டி - 99

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | X | 11 |
| 12 | 13 | 14 | 15 | X | 16 |
| 17 | X | X | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | X | 25 |
| 26 | 27 | 28 | X | 29 | 30 |

**இடமிருந்து வலம்**

1. தமிழகத்தின் மிகப் பிரபலமான சிறுகதை, நாவல் எழுத்தாளர் (குழம்பியுள்ளது)

7. மென்மையான சிரிப்பு (குழம்பியுள்ளது)

12. பறை, சுவாமி தேருக்கு எழுந்தருளும் போது வாசிக்கும் தவில் நாதஸ்வர இசையை இப்படிச் சொல்வர் (குழம்பியுள்ளது)

18. நகைச்சுவை (குழம்பியுள்ளது)

21. பகைமை (குழம்பியுள்ளது)

26. விட்டம், வளையம் (குழம்பியுள்ளது)

29. அடர்ந்த முடி, ஆணின் கொண்டை (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. ஆயுள் பகைவன்

2. பெருங்காற்று (குழம்பியுள்ளது)

3. பெண், கட்டளைக் கலித்துறை (குழம்பியுள்ளது)

4. வருமானம்

6. யாழ்ப்பாண இராச்சியத்தை இறுதியாக ஆட்சி செய்த மன்னன் (தலைகீழ்)

22. இடி முழக்கம், நீர் (தலைகீழ்)

23. கற்பக மரம்

பெயர் : ..............................................................

முகவரி : ..............................................................

..............................................................

### குறுக்கெழுத்துப்போட்டி - 97 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. எச்சரிக்கை | 1. எரிபந்தம் |
| 7. பரி | 2. பச்சிலை |
| 9. கசம் | 4. கரி |
| 12. படலை | 5. சக்கு |
| 15. குலை | 6. கைம்மலை |
| 17. சிந்தனை | 14. தடயம் |
| 23. சாமம் | 20. சாதனை |
| 26. பந்தயம் | 25. மப |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**பி.விஸ்வநாதன்,**
**இல.14 பிரதான வீதி,**
**மடுல்சீமை.**

### பாராட்டுப் பெறுவோர்

01. எஸ்.ஜுமானா
காலி வீதி,
வெள்ளவத்தை.

02. எஸ்.எஸ்.பவானந்தன்
சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

03. அ.அன்ரனி சுரேஷ்குமார்
இல.23/10 பீ பாடசாலை வீதி,
ஜெயந்திபுரம்,
மட்டக்களப்பு.


04. செல்வன் அ.கபீர்த்தன்
இல.620, நாவலர் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

05. வதீனா லாஹிர்
வைத்தியர் வீதி, கிண்ணியா -3.

உங்கள் விடைகளை
**Saturday மெயில்**
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு–15
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...




# தெரிந்த நுளம்பு தெரியாத தகவல்கள்



நுளம்பு கடித்து விட்டால் போதும். இந்த நுளம்புக்கடி தாங்க முடியலப்பா என்று எரிச்சலுடன் சொல்வோம். உடனே கடித்த இடத்தில் சொறிய ஆரம்பித்து விடுவோம்.இதில் என்ன விசேடம் என்றால் பற்களே இல்லாத நுளம்பு நம்மைக் கடிக்கிறது.

நுளம்பு கடித்ததும் நாம் ஏன் சொறிகிறோம் என்று தெரியுமா? நுளம்பிற்கு அதன் கண்களுக்கு கீழே ஊசி போன்ற 6 உறிஞ்சுக்குழல்கள் உள்ளன. இது மனிதர்களின் இரத்தத்தை உறிஞ்சி விடுகிறது. பின்னர் இந்த இரத்தம் உறைந்த போகாமல் இருக்க ஒரு இரசாயனப் பொருளையும் கடித்த இடத்தில் நுளம்பு உமிழ்ந்து விடுகிறது.அதனால் தான் நமக்கு சொறிய வேண்டும் என்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது.

உலகில் சுமார் 2700 வகையான நுளம்புகள் உள்ளன. நுளம்பு பறப்பதில் கில்லாடி.இது தலைகீழாகக் கூட பறக்கும்.மழை பெய்யும் போது, மழைத்துளிகளின் இடையே நனையாமல் கூட பறக்குமாம். பெண் நுளம்புகள் தான் கொடூரமானவை.ஆண் நுளம்பு சைவம் தான்.இவை புல், தளை, பூக்களில் உள்ள தேனை மட்டுமே சாப்பிடுகின்றன. பெண் நுளம்புகளுக்கு முட்டைகளைப் பொரிக்க இரத்தம் தேவைப்படுவதால் தான் மனிதர்களின் இரத்தத்தை மோப்பம் பிடித்து உறிஞ்சுகின்றன.

### 'கெச்சப்' எவ்வாறு தோன்றியது?

1690களில் சீனர்கள் மீன் ஊறுகாயோடு மசாலாப் பொருட்களைச் சேர்த்த சுவையான ஒரு உணவுப் பொருளைத் தயாரித்து,அதற்கு *(Ketsiap)* என்று பெயரிட்டனர். 1700 களில் இது மலேசியாவில் அறிமுகமானது. அங்கு இதை பிரிட்டிஷ்காரர்கள் அறிந்துகொண்டனர். 1740 ஆம் ஆண்டுக்குள்ளாக இது ஆங்கிலேயர்கள் அன்றாடம் சாப்பிடும் முக்கிய உணவானது. 50 ஆண்டுகளுக்குப் பிறகு அமெரிக்கர்கள் இந்த சீனப் பக்குவத்தோடு தக்காளியைச் சேர்த்தனர்.அப்படித்தான் இன்று நாம் பயன்படுத்தம் 'கெச்சப்' உருவானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலங்குகளின் வீதி மரணங்கள்



கோடை காலத்தில் நம்மில் பலர் மலையும் மலை சார்ந்த சுற்றுலாத்தலங்களுக்கு குளிர்ச்சியை நாடி சென்றிருக்கக் கூடுமல்லவா? அது போன்ற பயணங்கள் நமக்கு மட்டற்ற மகிழ்ச்சியையும் மனது முழுக்க ஆச்சரியங்களையும் அள்ளி அள்ளி வழங்கியிருக்கவும் வாய்ப்புகள் அநேகம்தானே? முகத்தில் சில்லெனப் பட்டுத் தெறித்து. தூக்கத்தைத் தூரமாக எட்டி வைக்கும் தூய்மையான காற்று நாசியில் இறங்குவதே தெரியாமல் இறங்கிக் கொண்டிருக்கும் சுகமே ஒரு அலாதியான அனுபவம்தானே!

சில உயரமான மலை உச்சியில் முகடுகளில் நாம் பயணிக்கும் பஸ் இப்பவோ அப்பவோ சாய்ந்து விடுவேன் என்று ஒரு பக்கமாகச் சாய்ந்து செல்வதைக் கூட மறக்கடிக்கும் நிலையில் வெளியில் நமக்குக் காட்சியாக பரந்து விரிந்து மரங்களடர்ந்த மலை முகடுகள், மேகங்களை தன் மேல் ஏந்திக் காட்டும் நிகழ்வைப் பார்த்து நமது பயணம் நீண்டு கொண்டே சென்றிருப்பதனைப் பருகியிருப்போம்.

இப்படியான பயணங்களில் நாம் அமர்ந்து பயணிக்கும் பேருந்துகளின் சத்தமும் சக்கரங்களும் அங்கு வாழும் உயிரினங்களுக்கு எது போன்ற விளைவுகளை விட்டுச் செல்கிறது என்று யோசித்திருக்க வாய்ப்பில்லை தானே. இன்று மனிதன் கால் வைக்காத வசிக்க முயற்சிக்காத இடமே இந்தப் பூமியிலில்லை என்கிற அளவிற்கு எல்லா இடங்களிலும் நாம் நிறைந்திருக்கிறோம். இன்றைய உலக மொத்த மக்கள் தொகையாக ஏழு பில்லியன் மக்களைக் கொண்டு நாம் நெருங்கிவருவதாகத் தெரிகிறது.

அதனை ஒட்டிய மனிதத் தேவைகளும் நாளுக்கு நாள் பெருகிவருகிறது. அதிலும் குறிப்பாக அன்றாடத் தேவையான மக்களின் இடப்பெயர்வு பொருட்டு நமக்குத் தேவையான வாகனங்களின் பெருக்கம். நாம் மொத்த மக்கள் தொகை எண்ணிக்கையைக் காட்டிலும் இன்று அதிகரித்துவிட்டது என்றே கூறலாம். குறிப்பாக வளர்ந்த நாடுகளில் வாழும் மக்கள் தொகையை விட அந்நாடுகளில் பெருகி நிற்கும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது.

நாம் அன்றாடம் வாகனங்களில் பயணிக்க நேரும் பொழுது வீதியோரங்களில் ஏதாவது விலங்குகள் அடிபட்டு இறந்து கிடப்பதனை ஒரு சாதாரண நிகழ்வாக எண்ணி கடந்து போய்விடுகிறோமல்லவா? நம் கண்ணுக்குப் பெரிதாகக் காணக் கிடைக்கும் விலங்குகளின் உடல் பருமனைக் கொண்டு அவ்வாறு அடிபட்டு இறந்து போன அல்லது நம் வாகனத்திலேயே சிக்கிய விலங்குகளைத்தான் அறிகிறோம். ஆனால், அடர்ந்த வனப் பகுதிகளில் பயணிக்கும் பொழுது நம் கவனத்திற்கு வராமலேயே எத்தனையோ விதமான சிறு ஜீவராசிகளான முதுகெலும்பற்ற வகைப்பிராணிகளும் (பூச்சிகள், மெல்லுடலிகள்), ஊர்வன வகை, தவளை, சிறு பாலூட்டிகள், பறவைகளென நசுங்கி இறக்க நேரிடலாம்!

இது போன்ற அடர்ந்த மழைக் காடுகளில் வசிக்கும் பெரும்பாலான ஜீவராசிகளில் பல இன்னமும் நம் அறிவியல் உலகில் கண்டறியப்படாததாகவும் இருந்திருக்கக்கூடும். என்னுடைய அனுபவத்தில் மழைக்காடுகளின் முக்கிய சாலைகளின் இருமருங்கும் அடிபட்டு நசுங்கி இறக்கும் வகைகளில் அதிகமாகக் காணப்பெற்றது தவளைகளைத்தான். அதுவும் நன்றாக மழை பெய்யும் காலங்களில் சற்றே கூடுதலான எண்ணிக்கையில் கண்டிருக்கிறேன்.

இந்தத் தவளைகள் இயற்கையின் நாடித் துடிப்பறியும் ஒரு மானியைப் *(indicator species)* போன்றது என்றால் அது மிகையாக இருக்க முடியாது. அவைகளில் பல வகையான தவளைகள் இன்னமும் நம் ஊர்க்காடுகளில் அறிவியல் உலகத்தால் அடையாளப்படுத்தப்படாமல் கூட வாழ்ந்து கொண்டிருக்கலாம். அவைகள் ஒவ்வொன்றும் ஏதோ ஒரு விதத்தில் இயற்கையின் உணவுச் சுழற்சியிலும் விதை பரவலிலும் பங்காற்றிக் கொண்டிருக்கலாம். இது தவளைகளுக்கு மட்டுமே பொருந்தும் என்றும் கூறிவிட இயலாது. ஏனைய வித அனைத்து ஜீவராசிகளுக்கும் பொருந்தும்.

இது போன்ற ஜீவராசிகள் தொடர்ந்தே இருந்திருக்க வேண் [illegible] [illegible] *(fragmented* *landscape)* மிக நீண்ட இடைவெளிகளைக் (தேயிலை, கோப்பி) கொண்டோ அல்லது வாகனங்கள் செல்லுவதற்கான சாலைகளை அமைத்தோ காடுகள் துண்டாடப்படுவதால் இந்தச் சிறு உயிரினங்கள் நேரடியாக நமது பாதிப்பிற்கு உள்ளாகின்றன.

அண்மையில் அமெரிக்கா, இண்டியானா மாநிலத்தில் வாகனப் போக்குவரத்தால் உயிரினங்களுக்கு ஏற்படும் உயிரிழப்பு சார்ந்து 11 மைல்கள் நீண்ட சாலையில் 17 மாதங்கள் ஓர் ஆராய்ச்சி நடத்தப்பட்டது. அவ்வாராய்ச்சியின் முடிவாகக் கண்டறியப்பட்டது நம்மையெல்லாம் ஒரு கணம் திகைக்கச் செய்வதாக அமைகிறது. இந்த 11 மைல் நீண்ட வீதியில் மட்டுமே கிட்டத்தட்ட 10,500 விலங்குகள் அடிபட்டு மரணித்ததாக அறியப்பட்டது. இவைகளில் தவளையினங்களில் மட்டுமே 7,600 ஆகவும் அவைகளில் பெரும்பாலானவை அது என்ன வகைத் தவளை என்று கூட அறிந்திருக்கவில்லையாம். ஏனைய எண்ணிக்கையை மற்ற இன வகை உயிரினங்கள் பகிர்ந்துகொண்டதாகத் தெரிகிறது.

மேலே கூறிய ஆராய்ச்சி குளிர்கால நாடுகளில் ஒன்றான அமெரிக்காவில் நடத்தப்பட்டதன் முடிவு அந்த நாட்டுக் காடுகள் வெப்பமாறாகக் காடுகளைப் போன்று அதிக எண்ணிக்கையிலான ஜீவராசிகளைக் கொண்டிருப்பதில்லை. இந்தியா, இலங்கை போன்ற மழைக்காடுகளைக் கொண்ட நாடுகளில் வாகனங்களால் மரணத்திற்குள்ளாகும் விலங்குகளின் எண்ணிக்கையை ஒப்பீடு செய்து பார்த்தால் நம் கற்பனைக்கும் எட்டாத அளவில் பல வகை சிறு விலங்கினங்கள் தினமும் பெருமளவில் துடைத்தெறியப்பட்டுக் கொண்டிருக்கலாமோ என்றளவில் கூட எண்ணச் செய்கிறது.

பெரும்பாலும் வீதிகள் மிகக் குறுகலாகவும் வளைவுகளுடனும் இருக்கும் பொருட்டு குறுக்காகக் கடக்கும் பெரிய, சிறிய உயிரினங்களுக்கு விபத்து நடந்து விடாமல் கடந்து செல்வதற்கு போதுமான அவகாசம் கிடைப்பதில்லை. (வாகன சாரதிக்கும் கூட). அந்நிலையில் பெரிய விலங்கினங்களான மான், காட்டெருமைகளும் கூட இதுபோன்ற ஆபத்தில் சிக்கி உயிரிழக்க நேர்ந்துவிடுவதுண்டு.

நமக்கு மன மகிழ்வூட்டும் போக்கிடங்கள் தேவைதான் என்றாலும் இது போன்ற அசம்பாவிதங்கள் மென்மேலும் தொடராமல் இருக்க நம்மால் இயன்ற அளவிற்கு வாகன நெரிசல்கள் அது போன்ற மலைஸ்தலங்களில் பெருகாமல் இருக்க முடிந்த வகையில் உதவலாம். வன வீதிகளில் செல்லும் பொழுது வாகனங்களின் வேகத்தை ஒரு மட்டுக்குள் ஓட்டிச் செல்வதும் பெரிய விலங்குகள் விலகிச் செல்ல போதுமான அவகாசத்தைக் கொடுக்க உதவலாம். மழைக்காலங்களில் ஒரு குறிப்பிட்ட மணி நேரத்திற்குப் பிறகு அவ்வூர்களுக்குச் செல்லும் வாகனங்களைக் கட்டுப்படுத்தலாம்.


இருக்கும் அவசர உலகத்தில் மனிதர்களின் உயிர்களுக்கே மதிப்பற்ற நிலையில், இது போன்ற சிறு உயிரினங்களுக்கெல்லாம் பாதுகாப்பு வழங்கப்படுமா என்பது ஒரு கேள்விக் குறியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விக்ரம் காதலியான ராதிகா



இவர் ராதிகா சரத்குமார் அல்ல, வேறு ராதிகா. ரத்த சரித்திரம் பார்த்தவர்களுக்கு இவரை நன்கு தெரியும். விவேக் ஓபரோயின் மனைவியாக நடித்தவர். ராம்கோபால் வர்மாவால் தமிழில் அறிமுகப்படுத்தப்பட்ட இவரை கரிகாலனின் காதலியாக்கியிருக்கிறார் அறிமுக இயக்குநர் கண்ணன். ராதிகாவின் குடும்பப்பாங்கான முகம் ரசிகர்கள் அனைவரையும் சுண்டி இழுக்கக் கூடியது. சரித்திரப் படங்களுக்கு சாலப் பொருந்தும் முகம். முக்கியமாக திராவிடத்தன்மை கொண்டது. இவரை தனது கரிகாலன் படத்தில் ஒப்பந்தம் செய்திருக்கிறார் இயக்குநர் கண்ணன். கரிகாலன் விக்ரம் நடிக்கும் சரித்திரப் படம். ராதிகாவுடன் ஷரின் கான் , மித்ரா குரியன் ஆகியோரும் நடிக்கின்றனர்.


# ஆசைப்பட்ட அனன்யா



நடிகை அனன்யா பத்திரிகையாளர் ஆக வேண்டும் என்று ஆசைப்பட்டதாக அவரது தாயார் பிரசிதா கூறியுள்ளார். தமிழ் மற்றும் மலையாளப் படங்களில் நடித்து வரும் நடிகை அனன்யா பற்றி அவரது தாயார் பிரசிதா பேட்டியளித்துள்ளார். அதில் அனன்யாவுக்கு என்னென்ன பிடிக்கும் அவரது ஆசைகள் என்ன? என்பது பற்றிக் கூறியுள்ளார்.. அனன்யா பள்ளியில் படிக்கும் வரை இசையின் மீதுதான் மிகவும் தீவிரமாக இருந்தாள், ஆனால் அவளுடைய கல்லூரி வாழ்க்கைக்குப் பிறகு அது மாறிவிட்டது. அவள் பி.ஏ. கம்யூனிகேட்டிவ் படித்தாள். அதன்பிறகு அவளுக்கு ஒரு சிறந்த பத்திரிகையாளராக மாற வேண்டும் என்று ஆசை ஏற்பட்டது. அந்த ஆசை நிறைவேறுவதற்குள் அவள் பிஸியான நடிகையாகி விட்டாள். அனன்யாவுக்கு என்ன இஷ்டமோ, அதைசெய்ய நாங்கள் முழுச் சுதந்திரம் கொடுத்திருக்கிறோம். அவளுடைய ஆசைக்கு நான் தடைவிதிப்பதில்லை. அனன்யாவுக்கு இரண்டு மூன்று படங்கள் கிடைத்த பிறகு அவள் ஒரு நாள் அப்பாவிடம் சொன்னாள் அப்பா நான் ஒரு படம் டைரக்ஷன் செய்யணும்! என்றாள் இப்போது அவளுக்கு டைரக்ஷன் மீதுதான் ஆர்வமிருக்கிறது . பத்திரிகையாளர் கனவு என்னாச்சு என்று கேட்டால் சிரிப்புத்தான் அவளிடமிருந்து பதிலாய் கிடைக்கிறது.

கடவுள் அவளுக்கு எந்தத் துணையைக் கொடுத்திருக்கிறாரோ அதை நாங்கள் முழுமையாக ஏற்றுக்கொள்வோம். பெரிய பெரிய ஆசைகள் எதுவும் எங்களிடமில்லை. அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கையைக் கொடுக்கிற, அவளைக் கொண்டாடுகிற ஒரு மாப்பிள்ளைதான் எங்களுக்குத் தேவை என்று பேட்டியில் கூறியிருக்கிறார் பிரசிதா.

Saturday சினிமா



## நாயகியான அக்ஷரா

சினிமாவே வேண்டாம் என்று ஒதுங்கியிருந்த நடிகர் கமல்ஹாசனின் 2 ஆவது மகள் அக்ஷரா இப்போது புதிய படம் ஒன்றில் நாயகியாக களம் இறங்கவிருக்கிறார். ராவணன் படத்தை தொடர்ந்து இயக்குநர் மணிரத்னம் அடுத்து, கார்த்திக்கின் மகன் கௌதமை வைத்து ஒரு படம் இயக்கப் போகிறார் என்பது அனைவர் அறிந்த செய்திதான். படத்தில் கௌதமுடன் யார் ஜோடி சேரப்போகிறார் என்ற கேள்வி அனைவர் மத்தியிலும் எழுந்தது. இப்போது அந்தக் கேள்விக்கு விடை கிடைத்திருக்கிறது. அவர் வேறு யாரும் அல்ல கமலின் 2 ஆவது மகள் அக்ஷரா தான். அப்பா கமல் மற்றும் அக்கா ஸ்ருதியோடு மட்டும் நடிப்பு இருக்கட்டும், நமக்கெல்லாம் சினிமா ஒத்து வராது என்று ஒதுங்கியிருந்த அக்ஷராவை வலுக்கட்டாயமாக சினிமாவில் நடிக்க வைக்க சம்மதிக்க வைத்தாராம் ஸ்ருதி கமல். மும்பையில் அம்மாவுடன் தங்கி உதவி இயக்குநராக பணியாற்றி வந்த அக்ஷராவை கன்னியாகுமரி கடல் பகுதியில் விட்டுப் படமெடுக்கப் போகிறார்களாம்.

# செலவு வைக்கும் ஸ்ருதி

தங்கையின் வருகையை இப்போதுதான் சந்தோஷத்தோடு அறிவிக்கப்பட்டுள்ளது. அக்காவின் பெருமை எப்படியிருக்கிறது. தமிழ்சினிமாவை பொறுத்தவரை? சந்தேகமென்ன பழுதுதான் . ஸ்ருதிஹாசன் நடிக்தும் பட வட்டாரங்களில் விசாரித்தால், மூக்கை சிந்தி முன்புற சட்டையில் துடைத்துக் கொள்கிறார்கள். தினந்தோறும் அறுபதாயிரம் செலவாகிறதாம் இவரது அடிப்பொடிகளுக்த மட்டும். மும்பையிலிருந்து வருகிற ஆடைவடிவமைப்பாளர், அழதக்கலை நிபுணர், கார்சாரதி என்று அத்தனை பேருக்தும் [illegible] ராம். ஏதோ இவர் மட்டும்தான் இப்படி வாங்துகிறாரா என்று கோபப்படுகிறவர்களுக்த ஒரு தகவல் மற்ற நடிகைகள் இவ்வளவு வாங்துவதில்லை. பொதுவாக பல நடிகைகளுக்த இந்த நிபுணர் தழுவினரின் பேட்டாவையும் சேர்த்து சம்பளத்தோடு கொடுத்துவிடுகிறார்கள். ஆனால் சம்பளத்தையும் தனியாக பெற்றுக் கொள்கிற ஸ்ருதி, இந்தச் செலவுகளை தயாரிப்பாளர் தலையில் தனியாக கட்டிவிடுவதால், ஒரு படத்திற்த இதற்கான செலவு மட்டும் அறுபது லட்சம் ஆகிவிடுகிறதாம். இளநீருக்த ஆசைப் பட்டவங்க ஏணிக்த அஞ்சினா எப்படி ?.

சாலி கிராமத்திலுள்ள ஸ்டுடியோவில் பிரமாண்ட அரங்கு அமைத்து ராஜபாட்டை படப்பிடிப்பை நடத்திய சுசீந்திரன் படத்தின் முதல் பாடல் காட்சியை படமாக்கியுள்ளார். இடம் மகாபலிபுரம். ராஜபாட்டையின் காட்சிகள் 70 சதவீதத்துக்கும் மேல் படமாக்கப்பட்டுவிட்டது. அடுத்த ஷெட்யூல் செப்டம்பர் முதல் வாரத்தில் தொடங்குகிறது.புதுச்சேரியில் படப்பிடிப்பு நடத்த திட்டமிட்டுள்ளார் சுசீந்திரன். மகாபலிபுரத்தில் நடந்த பாடல் காட்சியில் விக்ரமும், தீக்சா சேத்தும் ஆடினர். நடனம் அமைத்தவர் ஷோபி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2.1) Process Black -1- page12-13_cinema.indd 9/2/2011, 1:56:37 AM





# அசின் - ஜெனிலியா மோதல்



காக்க காக்க தெலுங்கு ரீமேக்கில் அசின் ஓவர் ஆக்டிங் செய்து கெடுத்திருக்கிறார் என்று இந்தி காக்க காக்கவில் நடித்த ஜெனிலியா குற்றம் சாட்டியுள்ளார். தமிழில் சூர்யா ஜோதிகா நடிப்பில் வெளியான காக்க காக்க படம் இந்தியில் ரீமேக் செய்யப்பட்டது. அதில் ஜோன் ஆபிரகாம், ஜெனிலியா நடித்துள்ளனர். தெலுங்கு ரீமேக்கில் ஜோதிகா கதாபாத்திரத்தில் அசின் நடித்துள்ளார். அண்மையில் இந்தி காக்க காக்க படத்தின் உயிரின் உயிரே பாடல் சிடி வெளியிடப்பட்டது. அதைப் பார்த்த அசின் வாயை வைத்துக் கொண்டு சும்மா இல்லாமல் ஜெனிலியாவின் நடிப்பை தாக்கிப் பேசினார். நான் தெலுங்கில் கஷ்டப்பட்டு நடித்தேன் கதாப்பாத்திரமாகவே வாழ்ந்த உணர்வு இருந்தது. ஆனால், ஜெனிலியா உயிரின் உயிரே பாடல் காட்சியை சொதப்பியுள்ளார். பாடலைக் கொலை செய்வது போல நடித்துக் கெடுத்துள்ளார் என்றார் அசின். அப்படியா சங்கதி இதோ வாரேன் என்று வரிஞ்சுக் கட்டிக் கொண்டு வந்த ஜெனிலியா கூறியதாவது, தமிழ் காக்க காக்க படத்தில் ஜோதிகா அபாரமாக நடித்திருந்தார். அதில் அவர் ரொம்ப அழகாக இருந்தார். ஆனால் அதன் தெலுங்கு ரீமேக்கில் அசின் ஒரே சொதப்பல் . ஓவர் ஆக்டிங் பண்ணி கதாபாத்திரத்தையே கெடுத்துவிட்டார். ஜோதிகா நடிப்பைக் கொப்பியடித்து நடித்திருக்கிறார். ஆனால் நான் இந்தியில் எனக்கே உரிய ஸ்டையிலில் நடித்துள்ளேன். யாரையும் கொப்பியடிக்க வேண்டிய அவசியம் எனக்கில்லை என்றார்.

## ஒன்றுக்கு ஒன்று இலவசம்



ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம் என்பது இப்போது சினிமாவிலும் வந்துவிட்டது போலிருக்கிறது. வசந்தபாலன் அரவான் படத்திற்குப் பிறகு முப்பது கோடி செலவில் அந்நியன் வகைப் படம் ஒன்றை இயக்கப்போகிறார். இதில் பரத்-அஞ்சலி ஜோடியாக நடிக்கிறார்களாம். பரத்தை வைத்து முப்பது கோடிக்கா என்று அதிர்ச்சி காட்டும் ரசிகர்கள் அ[illegible] காக்க. சினிமா யாரை வேண்டுமானாலும் கோ[illegible]டையிலும் வைக்கும், விட்டால் கோபுரத்தையும் அசைக்கும். பரத்தின் தற்போதைய நிலைமை வேண்டுமானால் தப்பாக இருக்கலாம் அடுத்தடுத்து ஏதாவது அதிசயம் நடக்காதா என்ன? அதுபோகட்டும்..அதென்ன இலவச விடயம்? இந்தப் படத்தில் நடிக்க வாய்ப்பு கொடுத்த உரிமையில் அரவான் படத்தில் ஒரு பாடலுக்கு நடனம் ஆட அழைத்தாராம் வசந்த பாலன். கண்ணை முடிக் கொண்டு சம்மதித்திருக்கிறார்கள் பரத்தும் அஞ்சலியும்.

மணிரத்னத்தின் அடுத்தபடம் மீனவர் பிரச்சினையை பற்றியது என்றும் இல்லை காதல் படம் என்றும் இல்லையில்லை மீனவர் பிரச்சினை, காதல் இரண்டும் கலந்தது என்றும்... வளர்ப்பானேன் எல்லாமே குழப்பமான சங்கதிகள். உண்மை மணிரத்தினத்தின் வாயால் வந்தால்தான் உண்டு. அதற்கு இப்போதைக்கு வழியில்லை நிற்க இது படத்தின் கதை பற்றிய விஷயமில்லை, நடிகரைப் பற்றியது. கார்த்திக்கின் மகன் கௌதமை மணிரத்னம் அறிமுகப்படுத்தியிருப்பதாக பல காலமாக சொல்லி வருகிறார்கள். இப்போதும் அந்தப் பேச்சு இருக்கிறது. இந்நிலையில் பில்லா -2 படப்பிடிப்பில் அஜீத்தை மணிரத்னம் சந்தித்திருக்கிறார். இந்த சந்திப்பு மணிரத்தினத்தின் படத்தில் அஜீத்தை நடிக்க வைப்பதற்காகத்தான் என்று அடித்துச் சொல்கிறார்கள். இது இன்னொரு தகவலா, இல்லை நிச்சய உண்மையா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## பாகனில் கோவை சரளா

கதிரின் 'கோடை விடுமுறை' படத்திலிருந்து விலகிய ஸ்ரீகாந்த் இரு படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். 'எதிரி எண்-3' பாகன் ஷங்கரின் படப்பிடிப்பு ஏறக்தறைய முடிந்து விட்டது. எதிரி எண்3 இல் பூனம் பஜ்வா ஸ்ரீகாந்தின் ஜோடி. பாகனில் அவன் இவனில் அறிமுகமான ஜனனி ஐயர், இந்தப் படத்தின் கூடுதல் வனப்பு கோவை சரளா. தமிழில் உள்ள நகைச்சுவை நடிகர்கள் ஈகோ பார்ப்பதாகக் கூறி தெலுங்குக்கு சென்ற கோவை சரளா அங்கு முன்னணி நகைச்சுவை நடிகையாக வலம் வருகின்றார். தமிழ்ப் படங்களில் நடிக்க அழைத்தால் அவர் ஒப்புக்கொள்வதில்லை. காஞ்சனாவில் தனக்கு முக்கியத்துவம் உண்டு என்று நம்பியதால் மட்டுமே நடித்தார். அவரது நம்பிக்கைக்கு ஏற்ப காஞ்சனாவில் கோவை சரளாவின் நகைச்சுவைக்கு பெருத்த வரவேற்பு. இந்நிலையில் பாகன் படத்தில் நடிக்க கோவை சரளா ஒப்புக்கொண்டிருக்கிறார். இதிலும் முக்கியமான வேடமாம். பொள்ளாச்சியில் இதன் படப்பிடிப்பு ஏற்கனவே தொடங்கிவிட்டது குறிப்பிடத்தக்கது.



'மதராசப்பட்டினம்' எமி ஜாக்ஸன் சென்னையில் சுற்றிக்கொண்டிருக்கிறார். கமலின் விஸ்வரூபத்தில் எமிக்கும் வாய்ப்பு உள்ளது என்பது தான் விசேட செய்தி. விஸ்வரூபம் படத்தின் படப்பிடிப்பை கமல் சென்னையில் தொடங்கியிருக்கிறார். மகா ரகசியமாக படப்பிடிப்பு நடந்து வருகிறது. இதுவரை படத்தில் நடிப்பவர் குறித்து வந்தவை அனைத்தும் உறுதி செய்யப்படாத செய்திகள். அதில் ஒன்று அனுஷ்கா படத்தின் நாயகி என்பது. இந்தப் படத்தில் எமி ஜாக்ஸனுக்கும் வாய்ப்பு இருக்கிறதாம். இதில் வெளிநாட்டு பெண்ணாக வருகிறாராம் எமி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரித்திரத்துக்கு திரும்பும் தமிழ்ப் படங்கள்!

ஊமைப் படமாக இருந்த காலத்திலும் சரி பேசும் படமாக அது பரிணமித்த கட்டத்திலும் சரி... தமிழ் சினிமாவை புராண அல்லது வரலாற்றுக் கதைகளே முழுக்க முழுக்க ஆக்கிரமித்திருந்தன.



தமிழ் மன்னர்கள், சரித்திரத்தில் இணையில்லாத வீராதி வீரர்கள், சுதந்திரப் போராட்ட வீரர்கள், மகாபாரத-ராமாயணக் கதைகள் போன்றவைதான் பெரும்பாலும் சினிமாவாக எடுக்கப்பட்டன.

ஆனால், அறுபதுகளுக்குப் பின் சரித்திரப் படங்கள் வருவது படிப்படியாகக் குறைந்தது எண்பது தொண்ணூறுகளில் சரித்திரப் படங்கள் வருவதே அடியோடு நின்று போயின. அப்படியே ஓரிரு படங்கள் வந்தாலும் அவை ரசிகர்களை கவராமலேயே போய்விட்டன.

ஆனால் 2000 க்குப் பிறகு மீண்டும் சரித்திரப் படங்கள் வரத் தொடங்கிவிட்டன. ஆனால், பழைய காலத்தைப் போலல்லாமல் தொழில்நுட்பம் மற்றும் நம்பகத் தன்மை, பிரமாண்டம் அனைத்தும் கலந்த வகையில் இந்தப் படங்கள் வந்தன.

இந்தி, தெலுங்கிலும் இந்த நிலைதான் நீடித்தது. தெலுங்கில் மகாதீரா் வெற்றிக்குப் பிறகு பல படங்கள் அதே பாணியில் தயாராகின்றன. தெலுங்கில் ராமாயணம் ஸ்ரீராம ராஜ்யமாக பிரமாண்டமாகத் தயாராகிறது.

தமிழில் இம்சை அரசன் 23 ஆம் புலிகேசி படம் பெற்ற வெற்றி அனைவரையுமே கொஞ்சம் யோசிக்க வைத்துவிட்டது.

இந்த 2011 இல் தயாராகும் பல படங்கள் சரித்திர அல்லது புராண காலகட்டத்தைச் சேர்ந்த படங்களாவே உள்ளன.

தமிழில் சூப்பர் ஸ்டார் ரஜினி நடிக்க ரூ.130 கோடியில் உருவாகும் ராணா படம் முழுக்க முழுக்க சரித்திரக் கதைதான். இதில் ரஜினி மூன்று வேடங்களில் நடிக்கிறார்.

சூர்யா நடிப்பில் ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் உருவாகும் ஏழாம் அறிவு கதையும் சித்தர்கள் காலத்தை அடிப்படையாகக் கொண்டது என்கிறார்கள். போகர் என்ற சித்தர் கதையை அடிப்படையாகக் கொண்டது இந்தப் படம் என்கிறது கோடம்பாக்கம் வட்டம். படத்தின் புகைப்படங்களும் அதைத்தான் காட்டுகின்றன.



விக்ரம் நடிக்கும் கரிகாலன் படம் முழுக்க முழுக்க சரித்திரப் பின்னணி கொண்டது. ஆங்கிலத்தில் வெளியான ட்ராய், கிளாடியேட்டர் மாதிரியான அதிரடி ஆக்ஷன் வரலாற்றுப் படம் இது.

சிம்புதேவன்-தனுஷ் இணையும் மாரீசன், கி.மு.12 ஆம் நூற்றாண்டுக்கதை. கிட்டத்தட்ட 3200 ஆண்டுகளுக்கு முந்தைய கதை இது.



சற்குணம் இயக்கும் வாகை சூடவா, சமகால வரலாற்றுப் படமாக உருவாகி வருகிறது.

பொன்னியின் செல்வன் சரித்திரக் கதையை மணிரத்னம் திரைப்படமாக எடுக்கப்போவதாக அறிவித்துள்ளார். இப்போதைக்கு இந்தப் படம் தள்ளிப் போடப்பட்டாலும் நிச்சயம் எதிர்காலத்தில் உருவாகும் என அவர் குறிப்பிட்டிருப்பது நம்பிக்கையை அதிகரித்துள்ளது.

பாரதிராஜா இயக்கிவரும் அன்னக் கொடியும் கொடி வீரனும் கூட ஒரு சரித்திரக் கதைதான் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்னும் செல்வராகவன், மிஷ்கின், கமல்ஹாஸன் போன்றவர்களும் சரித்திரப் படம் எடுப்பதற்கான ஆயத்தங்களில் உள்ளனர். மதராஸபட்டினம் தந்த இயக்குநர் விஜயும் கூட விரைவில் அடுத்த சரித்திரப்படக் கதை ஒன்றை தயார் செய்துள்ளார்.

சரித்திரப் படம் எடுப்பது அத்தனை சுலபமான காரியமல்ல. ஆனாலும் இளம் இயக்குநர்கள் அதில் உள்ள சவாலை விரும்பி சரித்திரப் படம் தயாரிப்பது இந்த கலை மீது அவர்களுக்குள்ள பிடிப்பைக் காட்டுகிறது. இன்னொன்று முன்பு பாரதிராஜா, பாக்யராஜ் போன்றவர்கள் தங்கள் கிராமத்து அனுபவங்களை அப்படியே செதுக்கித் தந்தார்கள். இன்றைய படைப்பாளிகள் பலருக்கு அந்தப் பின்னணியோ ஆழ்ந்த அனுபவமோ இருப்பதில்லை.

எனவேதான் ஏற்கனவே தயாராக உள்ள சரித்திரக் கதைகளை தொழில்நுட்ப பிரமாண்டம் சேர்த்துக்கொடுத்து மக்களை ஈர்க்க முயற்சிக்கின்றனர்.

எப்படிப் பார்த்தாலும் இந்த ஆண்டு மற்றும் அடுத்த சில ஆண்டுகளில் மட்டுமே 20 க்கும் மேற்பட்ட சரித்திரப் படங்கள் வரவிருக்கின்றன. சரித்திரத்தின் மீது இந்த தலைமுறையினருக்கு ஏற்பட்டுள்ள ஆர்வமே இந்த நிலைக்குக் காரணம் என்கிறார்கள் வரலாற்றுப் பேராசிரியர்கள்.

சொல்லும் விதத்தில் சொன்னால் நிச்சயம் சரித்திரம் இனிக்கவே செய்யும் என்பதற்கு இது ஒரு உதாரணம்தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார மெயிலில் இவர்...



# யொசிகிகோ நொடா

ஜப்பானில் அண்மைக் காலமாக நிலவிய அரசியல் குழப்பநிலையை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் அந்நாட்டின் புதிய பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் யொசிகிகோ நொடா.

ஜனநாயகக் கட்சியின் தலைவரான யொசிக்கோ, ஸ்திரமானதும், உண்மைத் தன்மையுடையதும் முதிர்வுள்ளதுமான அரசியல் சூழலை உருவாக்கவுள்ளதாக உறுதியளித்துள்ளார்.

ஆனால், ஜப்பான் மக்கள் மத்தியில் நம்பிக்கையுள்ள அரசொன்றை மீளக் கட்டியெழுப்புவதற்கு 54 வயதுடைய யொசிகிகோ பல்வேறு சவால்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

கடந்த 5 வருடங்களில் 6 பிரதமர்களை சந்தித்த ஜப்பான் அரசியல், ஆறாவதாக யொசிகிகோவை சந்தித்துள்ளது.

பாராளுமன்றால் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ள யொசிகிகோ பொருளாதார மீட்சிக்காக அழுத்தம் கொடுப்பாரெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை கடந்த மார்ச் 11 இல் மிகமோசமான பூகம்பத்தால் பாரிய அழிவினைச் சந்தித்துள்ள ஜப்பானை மீளக் கட்டியெழுப்புவதற்கும் புதிய பிரதமராக அவர் பல்வேறு ஊக்குவிப்புத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய கடப்பாட்டில் உள்ளார்.

அதுமட்டுமல்லாமல் பிளவுண்டுள்ள ஜனநாயகக் கட்சியை ஒருங்கிணைப்பதற்கான வழிமுறையையும் தமது ஆளும் கட்சிக்குரிய ஆதரவினைப் பலப்படுத்த வேண்டிய நிலையிலும் யொசிகிகோ உள்ளார்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவின் கிழக்குப் பகுதியில் பிறந்து வளர்ந்து வந்த யொசிக்கோ, ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களைப் போல அரசியல் பின்னணியைக் கொண்டிருக்கவில்லை.

அவரது தந்தை ஒரு இராணுவச் சிப்பாயாக இருந்த நிலையில் கல்வியில் அதிக கவனம் செலுத்திய யொசிக்கோ பாடசாலைக் கல்வியின் பின்னர் வசேதா பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பினைப் பூர்த்தி செய்து பின்னர் மஹ்ஸூஹிதா அரசாங்க முகாமைத்துவ நிலையத்திலும் கல்வி பயின்றிருந்தார்

அதன் பின்னர் உள்ளூர் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த அவர் 1993 இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து ஜப்பான் புதிய கட்சியின் வேட்பாளராகி தற்பொழுது ஜனநாயகக் கட்சி உறுப்பினராகவுள்ளார்.

கட்சியில் மிக முக்கிய பதவிகளை வகித்துவந்த அவர் 2010 ஆம் ஆண்டு ஜூனில் நிதி அமைச்சராக அறிவிக்கப்பட்டார்.


நிதிச் சந்தையின் கைதேர்ந்த வேட்பாளரான அவர் நிதியியல் துறையில் முக்கிய புள்ளியாக கருதப்பட்டு வந்த நிலையில் ஜப்பானின் பாரிய கடன் நெருக்கடியை தவிர்ப்பதற்குக் கடினமான பொருளாதார மறுசீரமைப்புக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனாலும் விற்பனை வரியை இரு மடங்காக அதிகரித்துள்ளதாக இவர் மீது கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டது.

இந்நிலையில் ஜப்பானின் பிரதமராகப் பதவி ஏற்றுள்ள அவர் அந்நாட்டின் கடன் நெருக்கடியைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளில் வெற்றி காண்பாரா என்பதை பொறுத்திருந்து அறிந்து கொள்வோம்.


**யோ.நிமல்ராஜ்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்

## அதிவேகம் பெறும் மின்னணு சாதனங்கள்

கிராபீன் கண்டுபிடிப்பு காரணமாக செல்போன் கம்பியூட்டர் உள்ளிட்ட மின்னணு சாதனங்கள் மேலும் வேகம் பெறும் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

கார்பன் அணுக்களின் ஒற்றை அடுக்கால் உருவாக்கப்படும் ஒரு புரட்சிகரமான பொருள்தான் கிராபீன்.இன்றைக்கு உலகிலேயே மிகவும் மெல்லிய





பொருளான இதில் மின்னணுக்கள் (எலக்ட்ரான்ஸ்) படுவேகத்தில் பயணிக்கின்றன.

அதாவது நவீன கம்பியூட்டர் சிப்களில் பயன்படுத்தப்படும் சிலிக்கானில் மின்னணுக்கள் செல்லும் வேகத்தை விடவும் அதிகம்.எனவே சிலிக்கானுக்குப் பதிலாக கிராபீனை பயன்படுத்தினால் மின்னணுச் சாதனங்களில் வேகம் இன்னும் வெகுவாக அதிகரிக்கும் என்கிறார்கள் மான்செஸ்டர் பல்கலைக்கழக ஆய்வாளர்கள்.

கிராபீனில் கார்பன் அணுக்கள் தேன்கூட்டைப் போல அறுகோண வடிவக் குழிவுகளாக அமைந்துள்ளன.இது வேதியல் ரீதியாக மிகவும் எளிமையாக உள்ளது.அதேநேரம் மிக மிக உறுதியாகவும் மின்சாரக் கடத்தியாகவும் வெப்பத்தைச் சிதறடிப்பதாகவும் ஒளி ஊடுருவக் கூடியதாகவும் உள்ளது.


அடுத்த தலைமுறை கம்பியூட்டர்கள் தொடுதிரைகள் மற்றும் பிற மின்னணுச் சாதனங்களின் செமிகண்டக்டர்களின் கிராபீனை இடம்பெறச் செய்வதற்குத் தற்போது பரவலாகத் தீவிர ஆர்வம் ஏற்பட்டுள்ளது.மின்னணுக்கள் கிராபீனில் மிக அதிக வேகத்தில் செல்கின்றன.அதாவது ஒரு நொடிக்கு ஆயிரம் கிலோமீற்றர் என்ற வேகத்தில் இது சிலிக்கானில் மின்னணுக்கள் செல்லும் வேகத்தை விட 30 மடங்கு அதிகம்.அந்த வகையில் இது போட்டான்கள் அல்லது ஒளி அணுக்களின் செயல்பாட்டைப் போலிருக்கிறது.

தற்போதைய கண்டுபிடிப்பால் சூப்பர் பாஸ்ட் செல்போன்களையும் கம்பியூடடர்களையும் உருவாக்க முடியும் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

கிராபீன் தொடர்பான ஆய்வுக்காக கடந்த ஆண்டு இயற்பியலில் தனது சகாவான ஆண்ட்ரே கீமுடன் நோபல் பரிசு பெற்ற பேராசிரியர் கோஸ்ட்யா நோவோசெலாவ் அவர் கூறுகையில்;

கிராபீனில் மின்னணுக்கள் மிகச் சிறப்பான நகர்வுத்திறனைக் காண்பிக்கின்றன.அதிவேகத்தில் பயணிக்கின்றன.தற்போதைய கண்டுபிடிப்பு இயற்பியலில் மிகவும் முக்கியமானதாகும்.இது மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தும் என்கிறார்.

பென்சிலில் பயன்படுத்தப்படும் கிராபைட்டில் இருந்து ஓர் அணு தடிமன் உள்ள இரு பரிமாண கிராபீன் தாளை உரித்தெடுக்க முடியும் என்று கண்டுபிடித்தவர்கள் பேராசிரியர் நோவோசெலாவும் கீமும்.



## முதல் கிரெடிட் கார்ட்

ஒரு காலத்தில் மனிதர்கள் பணத்தை மட்டுமே பயன்படுத்தினர். ஒரு வியாபாரிக்கும், வாடிக்கையாளருக்கும் இடையில் கடன் என்பது தனிப்பட்ட முறையில் வழக்கத்தில் இருந்தது.

1920-களில் பெற்றோல் நிலையங்களும்,ஒரே ஓட்டலின் பல கிளைகளிலும் தங்கள் நிறுவனங்களுக்கு இடையில் மட்டும் பயன்படுத்தக் கூடிய கிரெடிட் கார்ட்களை வெளியிட்டனர். 1930-களில் இறுதியில் இந்த நிறுவனங்களில் சில,




மற்றவர்களின் கார்ட்களையும் அங்கீகரிக்கத் தொடங்கின. பிறகு 1950-ல் ‘டைனர்ஸ் கிளப்’, பணம் கொடுத்துப் பெறும் கிரெடிட் கார்ட்களை அறிமுகப்படுத்தியது. ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத பல நிறுவனங்களில் பயன்படுத்தக்கூடியவையாக அந்த கார்ட்கள் இருந்தன.

விரைவிலேயே ‘அமெரிக்கன் எக்ஸ்பிரஸ்’, அந்த மாதிரியான கார்ட்களை கொண்டுவந்தது. ‘பாங்க் அமெரிகார்ட்’ என்பது பின்னர் ‘விசா’ கார்ட் என்றானது. 1959இல் முதல் வங்கி கிரெடிட் கார்ட்டாக இது வெளிவந்தது. அதைத் தொடர்ந்து, 1966 இல் மாஸ்டர் கார்ட் தோன்றியது.

## கடல் நீர் குடிநீர் ஆவது எப்படி?


தற்போது நம் நாட்டிலும் கடல்நீரைக் குடிநீராக்கத் தொடங்கியிருக்கிறோம்.தண்ணீர்ப் பஞ்சத்தால் அவதிப்படும் நாடுகள் கடல்நீரைக் குடிநீராக மாற்றுவதில் கவனம் செலுத்தி வருகின்றன.

ஆரம்பத்தில் இதுபற்றிப் பெரிய அளவில் ஆராய்ச்சி செய்தனர்.குடிநீர் ஆக்குவதற்கான வாய்ப்புகள் இருப்பதைக் கண்டுபிடித்தனர்.அதற்கான நிலையங்களை நிறுவி கடல்நீரைக் குடிநீராக மாற்றியும் வருகின்றனர்.

கடல்நீரில் அளவுக்கு அதிகமாக உப்புக் கலந்திருப்பதால் அதை நம்மால் குடிக்க முடிவதில்லை.அந்த உப்பை நீக்கிச் சுத்தம் செய்யாமல் நம்மால் அந்நீரைப் பயன்படுத்த முடியாது.

கடல்நீரைக் குடிநீராக மாற்றும் எந்திரங்கள் தற்போது உருவாக்கப்பட்டிருக்கின்றன.அந்த எந்திரங்களைக் கொண்டு 100 குடிநீர் நிலையங்களை உலக நாடுகள் பலவும் அமைத்துள்ளன.அவை நாள் ஒன்றுக்குக் குறைந்தது 40 இலட்சம் லீற்றர் குடிநீரை உற்பத்தி செய்கின்றன.

குவைத் நாட்டில் மட்டும் 6 ஆலைகள் இவ்வாறு கடல்நீரைச் சுத்திகரிக்கின்றன.அவ்வாறு சுத்திகரித்து சுமார் இரண்டு கோடி லீற்றருக்கு அதிகமான குடிநீரை சப்ளை செய்கின்றன.தென்னாபிரிக்கா,இத்தா லி,இஸ்ரேல்,அரபு நாடுகள் போன்ற நாடுகளிலும் இது போன்ற நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன.



உலகத்தின் மொத்தப் பரப்பளவில் முக்கால் பாகம் நீர்தான்.இந்த முக்கால் பாக நீரிலும் 97 சதவிகிதம் கடல்நீரே.சுத்தமான குடிநீர் 1 சதவீதத்துக்கும் குறைவாகவே உள்ளது.கடல் நீரில் சோடியம் குளோரைடு என்ற உப்பு கலந்துள்ளது.

பழங்கால மக்களும் குடிநீர்ப் பஞ்சத்தால் அவதிப்படுகின்றனர்.அவர்களும் கடல்நீரைக் குடிநீராக்கிப் பயன்படுத்தி வந்தனர்.அம் மக்கள் கடல்நீரை நன்றாகக் கொதிக்க வைத்தனர்.பின்னர் அதிலிருந்து வந்த ஆவியைக் குளிர வைத்துக் குடிநீராகப் பயன்படுத்தி வந்தனர்.இப்படி உப்பை அகற்றுவது சிறந்த முறை இம்முறைதான் தற்போது பெரிய அளவில் மேற்கொள்ளப்படுகிறது.இதற்கு மல்டிஸ்டேஜ் பிளாஷ் டிஸ்டிலேஷன் என்று பெயர்.

தற்போது கடல் நீரைக் குடிநீராக்கும் முறையில் முதலில் கடல் நீரை நன்றாகக் கொதிக்க வைக்கிறார்கள்.அந்நீரை முதலில் குறைந்த காற்றழுத்தம் உள்ள அறையில் செலுத்துகிறார்கள்.அங்கே ஒரு பகுதி நீர் ஆவியாகிறது.அந்த ஆவியைக் குளிரச் செய்கிறார்கள்.

அது சுத்தமான குடிநீராக மாறுகிறது.மீதியுள்ள நீரை முன்னைக் காட்டிலும் குறைந்த காற்றழுத்தம் உள்ள மற்றொரு அறைக்குள் செலுத்துகிறார்கள்.அங்கே ஒரு பகுதி நீர் ஆவியாகிறது.பின் அந்த ஆவியைக் குளிரச் செய்ய மேலும் சுத்தமான குடிநீர் சிறிதளவு கிடைக்கிறது.இவ்வகையில் படிப்படியாக உஷ்ணம் குறைந்துள்ள அறைகளில் நீரைச் செலுத்துவதன் மூலம் நல்ல சுத்தமான நீர் கிடைக்கும்.

கியூபா பகுதியில் குவாண்டநாமோ என்ற அமெரிக்கக் கப்பல் தளம் உள்ளது.அங்கு ஒரு கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் உள்ளது.இந்த நிலையத்தில் சூடாக்கிய நீரானது 36 அறைகளில் செலுத்தப்பட்டுச் சுத்தம் செய்யப்படுகிறது.


மெம்பிரேன் பிராசஸ் என்ற முறையைப் பயன்படுத்தியும் சிறுதொழிற்சாலைகள் கடல்நீரைச் சுத்தம் செய்கின்றன.இம்முறைக்குச் செலவு அதிகமாகும்.எனவே இது அதிகம் பின்பற்றப்படுவதில்லை.

கடல்நீரில் இருந்து நல்ல நீரை ஆவியாக்கிக் குளிர வைத்து எடுத்த பின் தங்கும் உப்பு வண்டலை எடுத்து உரமாக்க முடியுமா என்று ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.அதில் நாம் வெற்றியடைந்தால் கடல்நீரைக் குடிநீராக்கும் முறை மேலும் உபயோகர

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்யாணப் பரீட்சை

ஓ.எஸ்.மசூது



இன்று வசந்தியைப் பெண் பார்க்க வருகிற மாப்பிள்ளை, நல்ல வசதியான இடம் என்பதில் வசந்தியின் அம்மாவிற்கும் அப்பாவிற்கும் மகிழ்ச்சி.

தான் குறித்த நேரத்தில் மாப்பிள்ளை ரமேஷ் தன் குடும்பத்தாருடன் வசந்தியை பெண் பார்க்க வந்தான். மாப்பிள்ளை ரமேஷ் சொந்தமாக மருந்து தயாரிக்கும் கம்பனி நடத்துகிறான். சொந்த வீடு, கார் என்று வசதிகள்.

வசந்தியும் படிப்பிலும் அழகிலும் குறை வில்லாதவள் தான். பொறியியல் பட்டப் படிப்பு முடித்து ஒரு ஐ.டி. கம்பனியில் வேலை செய்கிறாள்.

பெண்ணிடம் தனியே பேச வேண்டும் என்று ரமேஷ் சொன்னபோது வசந்தியின் பெற்றோர் 'அதுக்கென்ன பேசுங்கள்' என்று சொன்னாலும் வசந்தி சற்றுத் தயக் கத்துடனே சென்றாள்.

அவன் பேசியதெல்லாம் தன் வசதி, தன் கம்பனி பற்றிய சுய தம்பட்டம்தான். வசதி கொட்டிக்கிடப்பதால் 'நீ கல்யாணத்துக்கப் புறம் வேலை பார்க்கணும் என்பது கூட அவசியமில்லை' என்று அவள் சுயமரி யாதைக்கு உலை வைத்தான். ரமேஷின் பேச்சும் நடவடிக்கையும் அவ்வளவு மன நிறைவைத் தரவில்லை என்றாலும் தன் பெற்றோரின் சந்தோசத்திற்காக அமைதி யாகவே இருந்தாள் வசந்தி. மாப்பிள்ளை வீட்டாருக்கு வசந்தியை ரொம்பவே பிடித் துப் போயிற்று. ஒரு நல்லநாள் பார்த்து நிச்சயதார்த்தம் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லிச் சென்றனர்.

ஒரு வாரம் கழித்து வசந்திக்கு ஒரு போன் வந்தது. "வசந்தி, நான் ரமேஷ் பேசுறேன், இன்று நாம் எங்காவது வெளியே போய் வரலாமா? எங்கு போக லாம்?" என்றான் ரமேஷ்.

வசந்திக்கு மிகுந்த தயக்கம். எதுவும் பேச மால் இருந்தாள்.

மீண்டும் ரமேஷ் "ஒண்ணு செய்யலாம், நான் கம்பனி விசயமா நாளை கொழும்பு போகிறேன். போனவுடன் உடனே திரும்பி விடுவேன். நீயும் வாயேன். நாம் இருவரும் பேசிப்பழகி ஒருத்தருக்கொ ருத்தர் புரிந்து கொள்ளலாம் அல்லவா" என்றான்.

"ஐயோ கொழும்பு போனா திரும்பிவர மறுநாளாயிடுமே. வீட்ல அனுமதிக்கமாட் டாங்க" என்றாள் வசந்தி.

"வீட்டுல ஏதாவது மாத்தி சொல்லி..." என்றவனின் பேச்சை இடைமறித்து "இல்லீங்க, நான் வரல, மன்னித்துக் கொள்ளுங்க" என்று சொல்லிப் போனை வைத்துவிட்டாள்.

மறுத்ததால் எங்கே தன்னை நிராகரித்து விடுவானோ என்ற தயக்கம் இருந்தாலும் ரமேஷின் வேண்டுகோளுக்கு இணங்குவ தில்லை என்பதில் உறுதியாக இருந்தாள் வசந்தி.

ஒரு மூன்று நாள் கழித்து வசந்தி வேலை பார்க்கும் அலுவலகத்துக்கே ரமேஷ் முன் னறிவிப்பின்றி வந்துவிட்டான்.

ரமேஷ் சிரித்த முகத்துடன் தென்பட் டான். ஒரு சின்ன பார்சலை நீட்டி "உன்னைப் பார்க்கணும்னு தோன்றியது. வரும்போது சும்மா வரக்கூடாதுன்று இதை வாங்கி வந்தேன்" என்றான். "இல் லீங்க, இதெல்லாம் வேண்டாம்" என்று சிரித்துக் கொண்டே மறுத் துவிட்டாள் வசந்தி.

"அப்புறம் வசந்தி அன் றைக்கு நான் உன்னை வெளியே போய் வரலாம் என்று கூப்பிட்டேனே,அ துக்கு வருத்தமா! அது வேறு ஒண்ணுமில்லை. அது உனக்கு நான் வச்ச டெஸ்ட்" என்றான் ரமேஷ்.

"என்னது டெஸ்ட் டா?" அதிர்ந்தாள் வசந்தி.

"ஆமா வசந்தி! உன்னோட வெளியே போகணும் என்பதற்காக நான் கூப்பிடல. அப்படி கூப்பிட்டா நீ என்ன செ ால்கிறாய் என்று பார்ப்ப தற்குத்தான். பரவாயில்ல! வர மாட்டேன்னு சொல்லி நான் வச்ச டெஸ்ட்ல நீ பாஸாயிட்டே!" என்றான் ரமேஷ்.

அதிர்ச்சியடைந்த வசந்தி மிகுந்த கோபத்தில் "ஆனால் நீ தோத்துட்டியே" என்றாள்.

"என்னது நான் தோத்துட்டேனா, என்ன சொல்ற வசந்தி?"

"ஆமா ரமேஷ். நீ வச்ச டெஸ்டிலேயே நீ எப்படிப்பட்டவன் என்பது தெரிஞ்சு போச்சு. வெளிய வாரியான்னு கூப்பிட்டு டெஸ்ட் வைக்கிறியே, இது ஒரு நாகரிக மான செயலா? நான் என்ன உனக்கு வேலைக்காரியா? அல்லது உதவி யாளரா? டெஸ்ட் வைக்கிறதுக்கு! ஆணுக் குப் பெண் சமம் என்ற மனப்பான்மை யில்லாத பெண்ணை மதிக்கத் தெரியாத உன்னை மதிச்சி நான் கேட்டிருப்பதே பெரிய விடயம். உடனே கிளம்பு" முகத் திலறைந்தாற்போல சொன்னாள் வசந்தி. சூடுபட்ட பூனையாய் தலைகுனிந்து திரும் பினான் ரமேஷ்.

# பெற்றால்தான் பிள்ளையா?

மந்த்ரா




ராஜம் மாமிக்கு அதிர்ச்சி யாயிருந்தது! சந்துருவுக்கு இப்படி ஒரு உறவு இருக்கும் என்று அவள் இதுவரை நினைத்துக்கூடப் பார்த் திருக்கவில்லை.

வேலை நிமித்தம் கிராமத்திலி ருந்து நகரத்துக்கு மாற்றலாகி வந்த சந்துரு சமைக்கவும் வீட்டைப் பராமரிக்கவும் ஓர் ஆள் தேவை என்று வீட்டுக்கார முதலா ளியிடம் சொல்லி வைக்க அவர் தான் மாமியை சிபாரிசு செய்தார். இதோ இந்த 6 மாதங்களாக வீட் டுப் பராமரிப்பு மட்டுமல்லாது, சந் துருவின் பராமரிப்பும் மாமியைச் சேர்ந்து கொண்டது. சந்துருவின் குடும்பத்தைப் பற்றி அவ்வப்போது மாமி விசாரிக்கும் பொழுது 'மாமி நான் ஒரு அநாதை' என்பான். பதறிப்போவாள் ராஜம். 'நீ எம் புள்ளடா...' என்பாள் தவிப்போடு!

இரண்டு மாதம் கடந்திருக்கும். அன்று சந்துரு ஆபீஸ் போனவு டன் காய்கறி வாங்க வீட்டைப் பூட்டிக் கொண்டு மாமி இறங்கும் பொழுது வாசலில் ஓர் வயதான பெண்மணி. 'நான் சந்துருவோட அம்மா சிவகாமி. அவனைப் பார்க்கணும்' என்றாள்.

உடனே அவளை வீட்டுக்குள் அழைத்த மாமி, பிளாஸ்க்கில் இருந்த கோப்பியை சிவகாமியிடம் கொடுத்தாள். அவள் கோப்பியை பருகியதும் 'நீங்கெல்லாம் இருக்கி றப்ப சந்துரு தன்னை ஏன் அநா தைன்னு சொல்லணும்?' கேட்டாள்.

'சந்துரு என் புருஷனோட மொதல் தாரத்து புள்ளம்மா. பிரச வத்துக்கப்புறம் அவன் அம்மா பைத்தியமாயிட்டா. தனியா அவளயும் பச்ச புள்ளயையும் பார்த்துக்க முடியாம தவிச்ச சந்துருவின் அப்பா அதுக்கா கவே என்னைக் கட்டிக்கிட்டார். சந்துரு நெனவு தெரியற வயசு வரைக்கும் என்னத்தான் அம்மான்னு நினைச்சுக்கிட்டி ருந்தான். ஆனா பள்ளிக்கூ டம் போற வயசுல நான் அவன பெத்தவ இல்லங்கறத சிலர் பால்ல நஞ்ச கலக்கறப்பால அவன் நெஞ்சுல கலந்துட்டாங்க. எவ்வளவோ பாசத்தக் காட்டு றப்பவும் கொஞ்ச,கொஞ்சமா என்ன வெறுக்க ஆரம்பிச்சிட் டான். ஒருமுறை அவங்கப்பா இதைப்பத்தி பேச்சு எடுத்தப்ப வாக்குவாதம் முத்திப்போயி, இனிமே நான் ஒரு அனாதைன்னு நினைச்சிக்கிறேன்னு சொல்லிட் டுப் போயிட்டான். அதுக்கப்புறம் எங்களுக்குள்ள எந்தப் போக்கு வரத்தும் இல்ல. அவங்கம்மா இறந்து போனதக்கூடத் தெரி விக்க முடியல. புள்ளய நெனச்சி உருகி, உருகி அவங்கப்பா போன வருஷம் போய்ச் சேர்ந்துட்டார். இந்தப் புள்ளைக்காக இன்னொரு புள்ளையே பெத்துக்காம வாழ்ந்த எங்க வாழ்க்கையை அவனும் புரிஞ்சிக்கல. எனக்கு ஊர்ல சொந்தம்னு யாரும் இல்ல. எம்பு ருஷன் இல்லாத ஊர்ல இருக்க வும் புடிக்கல. அவரோட சொத்துப் பூராவு அவனுக்குத்தான்னு எழுதி வச்சிட்டேன். எம் புருஷன் சாவும் போது 'நாம அவனுக்காகத்தான் வாழ்ந்தோம். அதை எம்புள்ள கிட்ட சொல்லுவியா?'ன்னு எங் கைய புடிச்சிக்கிட்டு கெஞ்சினார்.

அதான் எவ்வளவோ கஷ்டப் பட்டு அவன் சிநேகிதன் மூலமா எம்புள்ளைய தேடி வந்திருக் கேம்மா. எனக்கு வேண்டியது எம் புள்ள என்னையும் அவங்கப்பா வையும் புரிஞ்சிக்கணும். அவன் மனசார என்ன அம்மான்னு ஒரு நிமிஷம் நெனைக்கணும். அதோட என் உசிர விட்டுடுவேம்மா" என் றாள். ஸ்தம்பித்துப் போயிருந்தாள் மாமி!

கொலிங் பெல் அடித்து. கதவைத் திறந்தாள் சிவகாமி. அதிர்ந்து போனான் சந்துரு.

இப்போது ராஜம் மாமி எல்லாம் சொன்னாள். 'பெத்தவளோட யாரையும் ஒப்பிட முடியாதுப்பா. ஆனா உன்னையே பிள்ளையா எண்ணித் தனக்கு ஒரு வாரிசைக் கூட பெத்துக்க விரும்பாத இந்தத் தாய் உன்னைப் பெத்தவளிலும் பெரியவ. எனக்கும் ஒரு பிள் ளையிருக்கான். ஆனா, அவன் என்னை அநாதை விடுதியில் வெச்சுப்பார்க்கத்தான் ஆசைப் பட்டான். ஆனா, இந்தத் தாய் உனக்காக தன் எதிர்காலம் பத் திக்கூட யோசிக்கலை. தன்னை வெறுமைப்படுத்திக்கிட்டு உன்னை வளமா பார்க்ணும்னு ஆசைப் பட்டிருக்கா. தாய்மையோட இந்த அன்பைக் கூடப் புரிஞ்சிக்க முடியாத நீயெல்லாம் என்னப்பா பிள்ளை?"

மாமி பேசி முடித்த மாத்திரத்தில் தன் தாயின் காலடியில் விழுந்து கிடந்தான் சந்துரு. அவள் மன் னிப்பை வேண்டியபடி!

**நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்**
**2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி**
**Saturday மெயில் சிறுகதை**
**இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15**
**என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாமார்க்கும் குடியல்லோம்

'நான் யாருக்கும் வரக்குடியே' என்று
வார்த்தையாடுவதை
ஊர்வளைவில்
கேட்டிருக்கின்றோம்.

இயமனுக்கும் அஞ்சோம்
சத்தியவானை மீட்டுவந்த
சாவித்திரியாவோம்

மற்றவர்க்கு துன்பம்
செய்து இதனை
நரகலோக மாக்கோம்

பூவுலகம் தேவலோகம்.
இதுவென்று
உறுதிப்படுத்துவோம்

எமது தேவைக்காய்
நாமே உழைப்போம்
மற்றைவரை சுரண்டி
வாழோம்
எம்மை நாமே ஆழ்வோம்

கங்காளனதும் காளியினதும்
அருளாட்சி வேண்டி
வணங்குவோம்

## பத்திரிகைப் பெண்ணே

மனிதா நாம்
துயில்கின்ற போது
நீ
பிறப்பெடுக்கின்
றாய்

காலைக் கதிரவன்
கண்விழிக்க முன்
மக்கள் அரங்களில்
தவழுகின்ற
பெண்ணே

நாட்டு நடப்பு
சொல்லி
விளையாட்டு
சினிமா என
உன் அகமோ
பல ரகம்

உன் சுவையோ
வாசகனுக்கு
சுகம்

கணினி
வந்தால் என்ன?
இன்ரெனெற்
சிரித்தால்
என்ன?

உன்
புன்னகையைத்
தான்.
மக்கள்
விரும்புவர்

கவிதைகள்
தாங்கினாய்
சிறுகதைகள்
தருகிறாய்
மருத்துவம்
சொல்லித் தந்தாய்

இன்னும் எத்தனை
கற்றுத் தருகின்ற
வளே
நீ
என்றும்
வாழ்க.

**ஆ.முல்லை**
**திவ்யன்**
**பொலிகையூர்**



## என் காதலி...

பூங்காற்று வாங்க
பூங்காவுக்குள்
அடிவைத்தேன்!

என்ன ஆச்சரியம்
அந்த பூங்காவுக்குள்
ஒரே கலவரம் ...
பூக்கள் இடையே
ஒரே ... புரளி!

ஆட்டோகாரர்
ஏந்தி! ...காரணம்
கேட்டேன்...
கால் முளைத்த
ரோஜா ஒன்று...
சோலைகளின்
சாலைகளின்
உலா வருவதாக
சேதி கேட்டு
திரும்பிப் பார்த்தேன்!

ரோஜா கூட்டம்
இடையே ரோஜா
ராணி... ராஜ நடையில்
பவனி வந்தாள்!

உற்றுப் பார்த்தேன் ...
நேற்றிரவு என் கனவில்
வந்த கன்னியே அவள்...
என் காதலி!

**பரகடுவ**
**கே.எம்.சம்ஸ்**

## கலையாத மௌனம்

என்னைச் சுற்றி
சுழலும் தென்றலே,
அன்பையும்;
அழகையும்;
பண்பையும்;
சேர்த்துக் குழைத்து
என் நெஞ்சில்
நீ தடவ;
அது;
நெஞ்சை ஊடுருவி
என் இதயம் தொட்டது.

என் எண்ணம்
உன்னிடம் சொல்ல;
நினைத்தேன் பலமுறை;
வார்த்தைகள் வர
வில்லை.

மறக்க முயன்றேன்
முடியவில்லை.

மறைக்க முயன்றேன்
வழி தெரியவில்லை.

நீ போகும்
திக்கெல்லாம்
என் விழிகளை
சுழலவிட்டு:

மௌன விரதம்
இருக்கிறேன்
செய்வதறியாது.

**'கற்பிட்டி வஹாப்'**




## உறங்காத விழிகள்

முயன்றும் இயலவில்லை
நினைந்தும் மறக்க முடியவில்லை
அறிந்தும் இயலாத நிலை!
எனை எனக்கே
புரிய மறுக்கிறது என் நிஜம்!
என்னவென்று புரிய வைப்பது?
என்னிலை இருப்பதை
எண்ணிப் பார்க்கையில்
ஏதேதோ கலவரப் புயல்!
மனவாஞ்சை மண்டியிட்டு
மீட்டுப் பார்க்கிறது!
புதிதான அனுபவ மனது
அசைபோட்டே அல்லலுறுகிறது!
வந்த வீச்சில் வகையிருப்பு
வந்த நிலை சாடி
தள்ளாடுவது ஏனோ...?
ஆதலால்
விழிகள் உறங்க மறுப்பதும்
ததமோ...?

**ஜீவஜோதி நல்லையா,**
**பண்டாரவளை**



## தோல்விக் காதல்

என் காதல் உன்னோடு
இதயமும் உன்னோடு
உயிர் கூட உனக்காய்.. ஆனால்
நீ மட்டும் தந்ததோ
எனக்காய் தோல்விக் காதல்...

மறவாத காவியம்
ஓரெழுத்தில் கவிதை நீ
ஓரடியில் நீயும் நானும்
இலக்கியமாய் நம் காதல்
காவியம் நம் பிரிவு
மறவாதே எமை யாவும்
இப்பூலோகம் உள்ளவரை...

## உன் மௌனம்

உனை நினைந்து
கவி வரைந்திட
உலகின் மொழிகளை
ஆயிரமாயிரம் சேமிக்கிறேன் -ஆனாலும்
என்றும் என்னோடு நீ
உன் மௌனத்துடன்

**மு.மு.சர்ஜூன்**
**கல்முனைக் குடி-2**
**கல்முனை.**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்
வரவேண்டுமானால்
Saturday மெயில்
இல. 68, எலி ஹவுஸ் வீதி,
கொழும்பு-15
என்னும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்ணுக்கு பெண்ணே எதிரி

உயர்பதவியில் இருக்கும் பெண்கள் தங்களுடன் பணிபுரியும் சக பெண் ஊழியர்களுக்கு சலுகைகள் தருவதற்கு விரும்புவதில்லை என்று ஆய்வு முடிவு ஒன்றில் தெரிய வந்துள்ளது. இதற்கு காரணம் தனக்கு போட்டியாக அந்தப் பெண் வந்து விடுவாரோ என்ற எச்சரிக்கை உணர்வுதான் என்கிறது அமெரிக்காவில் நடைபெற்ற ஆய்வு ஒன்று.

அமெரிக்காவில் உள்ள யுனிவர்சிட்டி ஓப் சின்சினாட்டியில் உளவியல் துறையில் பணிபுரியும் டேவிட் மவுமி தலைமையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மிகப்பெரிய நிறுவனங்களில் பணிபுரியும் பெண் உயரதிகாரிகள் தனக்கு கீழ் பணியாற்றும் ஊழியர்களிடம் எவ்வாறு நடந்த கொள்கிறார்கள் என்பது குறித்து அமெரிக்காவில் பணிபுரியும் 2000 ஊழியர்களிடம் கருத்துக் கேட்கப்பட்டது. அதன் படி வெளியிடப்பட்ட ஆய்வு முடிவின் விபரம்;

மிகப் பெரிய நிறுவனங்களில் உயரதிகாரிகளாக பணிபுரிபவர்களில் ஆண்களை விட பெண்களே அந்த நிறுவனத்தின் வளர்ச்சியில் அதிகம் அக்கறையும் ஆர்வமும் எடுத்துக் கொள்கின்றனர்.

சிறந்த மேலாளர்களை உருவாக்குவதில் ஆண் உயரதிகாரிகளை விட பெண் உயரதிகாரிகளே அதிக கவனம் செலுத்துகின்றனர்.

எனக்குக் கீழ் பணிபுரியும் ஊழியர்களின் திறமையை அங்கீகரித்து ஊக்குவிப்பதில் பெண்கள் சிறந்து விளங்குகின்றனர். அவர்கள் ஆண் ஊழியர்களுக்கு அனைத்து சலுகைகளையும் வழங்குகின்றனர். ஆனால், பெண் அதிகாரிகள் மற்ற பெண் ஊழியர்களை முன்னுக்கு கொண்டு வருவதில் தயக்கம் காட்டுகின்றனர். ஆணுக்கே முன்னுரிமை அளிக்கின்றனர்.

தனக்குப் போட்டியாக பெண் ஊழியர்கள் வந்துவிடுவார்கள் என்ற எச்சரிக்கை உணர்வே இதற்குக் காரணம் என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. அதேசமயம் பெண் ஊழியர்களை ஊக்குவித்து அவர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதில் ஆண் அதிகாரிகள் முன்னிலை வகிக்கின்றனர் என்பது தெரியவந்துள்ளது.

இந்த ஆய்வு அமெரிக்காவில் பணிபுரியும் பெண் ஊழியர்களிடம் எடுக்கப்பட்ட முடிவுதான்.



# விமானப் பணிப் பெண்களுக்கு நடத்தப்பட்ட விஷப் பரீட்சை

விமானப் பணிப் பெண் வேலைக்கு விண்ணப்பித்த பெண்களுக்கு இயற்கையான மார்புகள் இருக்கிறதா அல்லது 'அறுவைச் சிகிச்சை' செய்து செயற்கை மார்பகத்துடன் வந்திருக்கிறார்களா? என்பதை அறிய அவர்களை உடைகளை கழற்றச் சொல்லி மார்புகளில் கை வைத்து அழுத்திப் பரிசோதித்த கொடுமை இந்தோனேசியாவில் நடந்துள்ளது.

இந்தோனேசியாவின் கருடா விமான நிறுவனம்தான் இந்த சோதனையைச் செய்து சர்ச்சையில் சிக்கியுள்ளது. விமானப் பணிப்பெண் பணிக்கு விண்ணப்பித்த 12 பெண்களிடம் இவ்வாறு சோதனை செய்துள்ளது கருடா நிறுவனம்.

இது குறித்த பரிசோதனைக் குட்படுத்தப்பட்ட ஒரு பெண் கூறுகையில்;

விமானப் பணிப்பெண் பணிக்கு விண்ணப்பித்த நான் உள்ளிட்ட 12 பெண்களுக்கும் மருத்துவப் பரிசோதனை செய்தனர். அப்போது சோதனைக்கு வந்த டாக்டர்கள் எங்களுக்கு இயற்கையான மார்புகள் இருக்கிறதா அல்லது அறுவைச் சிகிச்சை செய்தோ அல்லது பேட் வைத்தோ வந்துள்ளனரா என்பதை பரிசோதிக்க நிர்வாணப் படுத்தினர். மேலும் கைகளால் எங்களது மார்புகளை அழுத்தியும் பரிசோதித்தனர். எங்களது வெறும் பேண்ட் மட்டும் அணிந்தபடி மேலாடையை முழுவதுமாக கழற்றி உட்கார வைத்தனர் என்றார் அந்தப் பெண்.

தென்கொரியாவின் சியோல் நகரில் உள்ள கருடா விமான நிறுவனத்தின் அலுவலகத்தில் தான் இந்தக் கொடுமை அரங்கேறியுள்ளது.

இந்த சர்ச்சை குறித்து கருடா நிறுவனம் கருத்துத் தெரிவிக்கையில்;

செயற்கை மார்பகங்களுடன் விமானங்களில் பயணிப்பது ஆரோக்கியக் கேடாகும். விமானம் மேலே பறக்கும் போது காற்றழுத்தம் குறையும். அப்போது செயற்கை மார்பகங்களுடன் வருவோருக்குப் பிரச்சினை ஏற்படும். ஆரோக்கியக் கேடும் ஏற்படும். இதனால்தான் மார்பகங்கள் சோதிக்கப்பட்டன என்று விளக்கம் தந்துள்ளனர். மேலும் மார்பகங்களில் டட்டூஸ் பொறித்தவர்களுக்கும் இந்த நிறுவனம் வேலைதர முடியாது என அனுமதி மறுத்துள்ளது.

கருடா நிறுவனத்தின் இந்த மார்பக பரிசோதனை விவகாரம் பெரிதாகியுள்ளது. பல்வேறு மகளிர் நல அமைப்புகள், மகளிர் உரிமை அமைப்புகள் இந்த செயலைக் கண்டித்துள்ளன. இது தேவையற்ற சோதனை. பெண்களின் கௌரவத்தை சீர்குலைத்துள்ளது கருடா நிறுவனம் என்று அவர்கள் சாடியுள்ளனர்.

இது குறித்து சியோலைச் சேர்ந்த செக்ஸ் வன்முறை நிவாரண மையத்தின் கிம் டா மி கூறுகையில்;

இதுபோன்ற செயல்களை இந்தோனேசியாவில் அந்த நாட்டுப் பெண்களுக்கு செய்வார்களா என்பது தெரியவில்லை. தென் கொரியப் பெண்களுக்கு நிகழ்ந்துள்ள இந்தக் கொடுமை மிகவும் மோசமான செயல் என்றார்.

இதேபோல் கொரியன் ஏர் நிறுவனமும் கருடா நிறுவன செயலைக் கண்டித்துள்ளது. இது மோசமான செயல் என்று அது வர்ணித்துள்ளது. இது குறித்து அந்த நிறுவனத்தின் செய்தி தொடர்பாளர் கூறுகையில்;

இப்படி ஒரு பரிசோதனை உலகில் எங்குமே நடந்திருக்க வாய்ப்பில்லை. இப்போதுதான் இப்படிக் கேள்விப்படுகிறோம். செயற்கை மார்பகம் பொருத்தியவர்களும் மார்பக பெருக்க அறுவைச் சிகிச்சை செய்தவர்களும் விமானத்தில் பறக்க முடியாது என்பது கேலிக்குரிய, அபத்தமான வாதமாகும் என்றார்.

இதற்கிடையே, இந்த விவகாரம் குறித்து விசாரிக்கப்படும் என்று கருடா நிறுவனம் தற்போது அறிவித்துள்ளது. மார்பகத்தை சோதிக்க வேண்டும் என்று எங்களது மருத்துவப் பரிசோதனைப் பட்டியலில் இல்லை. எனவே எப்படி இப்படி நடந்தது என்பது குறித்து விசாரிப்போம் என்று அந்த நிறுவனம் கூறியுள்ளது. இதற்கிடையே மார்பக பரிசோதனையைச் செய்த டாக்டர் ஆணா, பெண்ணா என்பது குறித்து தகவல் தெரியவில்லை.

தென் கொரியாவில் விமானப் பணிப்பெண் வேலையில் சேர பெண்களிடையே அதிக ஆர்வம் உள்ளது. இதற்காக ஆயிரக்கணக்கானோர் படிப்புகளில் சேருகின்றனர். கடுமையாக பயிற்சி எடுக்கின்றனர். அவர்களுக்கு கருடா நிறுவனத்தின் செய்கை கடும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தின் பிடியில் பி.சி.சி.ஐ.

இந்திய அரசு பாராளுமன்றத்தில் நிறைவேற்றவுள்ள தேசிய விளையாட்டு சட்டமூலத்தில் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் நடவடிக்கைகளையும் கொண்டு வர முடிவெடுக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள பி.சி.சி.ஐ. இந்தச் சட்டமூலம் பி.சி.சி.ஐ.யைக் கட்டுப்படுத்தவே நிறைவேற்றப்பட உள்ளதாகக் குற்றம்சாட்டியது. இந்தச்சட்டமூலத்தை நடப்பு பாராளுமன்றக் கூட்டத்தொடரில் எதிர்வரும் 8 ஆம் திகதியன்று தாக்கல் செய்ய இந்திய அரசு திட்டமிட்டுள்ளது. இவ்வாறு பி.சி.சி.ஐ. சட்டமூலத்தில் சேர்க்கப்பட்டால் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியமும் வந்தாக வேண்டும்.



இந்தச் சட்டமூலத்தில் விளையாட்டுத்துறை அமைப்புகளில் பதவியில் உள்ளவர்களுக்கு வயது 70 க்கு மேல் இருக்கக்கூடாது. ஒரே நேரத்தில் இரண்டு பதவிகளுக்கு மேல் வகிக்கக்கூடாது என்ற விதிமுறைகள் விதிக்கப்பட்டுள்ளன.

ஐ.சி.சி. தலைவராக உள்ள சரத்பவார் மத்திய விவசாயம் மற்றும் உணவுத்துறை அமைச்சராக உள்ளார். மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சராக உள்ள விலாஸ் ராவ் தேஷ்முக் மகாராஷ்டிரா மாநில கிரிக்கெட் சங்கத் தலைவராக உள்ளார். மேலும் இந்தச் சட்டமூலத்தில் பி.சி.சி.ஐ. வந்தால் இந்தியக் கிரிக்கெட் அணியும் மற்ற விளையாட்டு வீரர்களைப் போல் போதைத்தடுப்பு சோதனைக்கு உட்பட வேண்டும். இந்திய அணி வீரர்கள் சர்வதேச போதை மருந்து தடுப்பு சோதனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இந்தச்சட்டமூலம் குறித்துப் பேசிய மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் அஜய் மக்கான்;

விளையாட்டுத்துறையில் சீர்திருத்தம் தேவைப்படுகிறது. இதனை தேசிய விளையாட்டு சட்டமூலம் நிறைவேற்றும் என்ற நம்பிக்கை உள்ளது. இந்தச் சட்டமூலம் நடப்பு கூட்டத்தொடரில் தாக்கல் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தச்சட்டமூலம் தொடர்பாக அமைச்சர்கள் மட்டத்திலான ஆலோசனை முடிந்துவிட்டது. சட்டமூலத்துக்கு ஒப்புதல் அளிக்கும் பட்சத்தில் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் எனக் கூறினார்.

இந்தியாவில் ஏறக்குறைய 40 விளையாட்டு அமைப்புகள் உள்ளன. இந்திய ஹொக்கி பெடரேஷன், ஹொக்கி இந்தியா, அகில இந்திய கால்பந்து கூட்டமைப்பு, இந்திய ஒலிம்பிக் சங்கம், பி.சி.சி.ஐ. போன்றவை குறிப்பிடத்தக்கவை. இதில் பி.சி.சி.ஐ. தன்னாட்சி பெற்ற அமைப்பாக விளங்குகின்றது. ஆனால் ஐ.பி.எல். போட்டிகள் தொடர்பாக வெளிநாட்டுப் பணபரிமாற்றம்



மற்றும் வரி ஏய்ப்புத் தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டது. பி.சி.சி.ஐ.க்கு வருமான வரித்துறை அதிகாரிகள் சலுகை காட்டுவதாக பாராளுமன்றக் குழுவும் கருத்துத் தெரிவித்திருந்தது.

கொமன்வெல்த் போட்டிகளில் முறைகேடு நடந்ததைத் தொடர்ந்து கல்மாடி மற்றும் அவரது கூட்டாளிகள் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளனர். இதனைத் தொடர்ந்து விளையாட்டு அமைப்புகளில் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வந்தது.

இந்தச்சட்டமூலம் மூலம் கிரிக்கெட் வீரர்கள் உட்பட அனைத்து வீரர்களும் வயது மற்றும் போதை மருந்து தடுப்பு சோதனைக்குட்பட வேண்டும் போன்றவை குறிப்பிடப்பட்டுள்ளன.

பி.சி.சி.ஐ. தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கொண்டு வருவது என்ற மத்திய அரசின் சட்டத்திற்கு பி.சி.சி.ஐ. எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக பி.சி.சி.ஐ. துணைத் தலைவர் ராஜீவ் சுக்லா கூறுகையில்;

இந்தச்சட்டமூலத்தை இன்னும் பார்க்கவில்லை. அரசிடமிருந்து எந்தவித உதவியும் பெறாத போது எவ்வாறு தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கொண்டு வரலாமெனக் கூறினார். மேலும் அவர் அரசிடம் உதவி பெறும் அமைப்புகள் மட்டுமே தகவல் அறியும் சட்டத்தின் கீழ் வர வேண்டும். பி.சி.சி.ஐ. அல்ல எனக் கூறினார்.

இந்தச் சட்டமூலத்தில் பி.சி.சி.ஐ.யைச்சேர்ப்பது குறித்து கபில்தேவ் கருத்துக் கூறுகையில்;

'மத்திய அரசின் சட்டத்தை புறக்கணிப்பது என பி.சி.சி.ஐ. சிந்தனை செய்யக்கூடாது. அரசு சட்டதிட்டங்களை வகுத்தால் அதனை பி.சி.சி.ஐ. பின்பற்ற வேண்டும். பி.சி.சி.ஐ. சுதந்திரமாக செயலாற்றும் என்ற நம்பிக்கை உள்ளது. ஆனால் அது அரசுடன் இணைந்து செயற்பட வேண்டும்' எனக் கூறினார்.

முன்னாள் இந்திய கப்டனும் தற்போதைய எம்.பி.யுமான மொகமட் அசாருதீன், சட்டத்திலிருந்து பி.சி.சி.ஐ.க்கு விலக்கு அளிக்கக்கூடாது. இந்தச் சட்டம் விளையாட்டு அமைப்புகளுக்கு நல்லது. இந்தச் சட்டம் அனைத்து அமைப்புகளுக்கும் பொருந்த வேண்டும். யாருக்கும் விலக்கு அளிக்கக்கூடாது எனக் கூறினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கபில், அசார் ஆதரவு

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (பி.சி.சி.ஐ.) தேசிய விளையாட்டுக் கூட்டமைப்பு மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் (ஆர்டிஐ)கீழ் கொண்டு வருவதற்கு முன்னாள் கப்டன்களான கபில்தேவ், அசாருதீன் ஆகியோர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இந்தியாவிலுள்ள அனைத்து விளையாட்டு அமைப்புகளையும் தேசிய விளையாட்டுக் கூட்டமைப்பின் கீழ் கொண்டுவரும் வகையில் பாராளுமன்றத்தில் இப்போதைய கூட்டத்தில் மசோதா நிறைவேற்றப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.





இதற்கு பி.சி.சி.ஐ. மற்றும் இந்திய ஒலிம்பிக் சங்கம் கடும் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில் இந்திய தொழிலகக் கூட்டமைப்பின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற கபில்தேவ் கூறியதாவது;

அரசு ஒரு சட்டத்தை இயற்றினால் பி.சி.சி.ஐ.அதை எதிர்த்து நிற்கக்கூடாது.பி.சி.சி.ஐ.தன்னிச்சையாக செயல்படும் அமைப்புத்தான்.ஆனால், அரசின் வழிமுறைகளை நிச்சயம் கடைப்பிடிக்க வேண்டுமென்று கூறியுள்ளார்.

முன்னாள் கப்டனும் மொரதாபாத் தொகுதியின் உறுப்பினருமான அசாருதீன் பாராளுமன்றத்துக்கு வெளியில் கூறியதாவது;

அரசின் புதிய விளையாட்டு மசோதாவிலிருந்து பி.சி.சி.ஐ.விலக்கு கேட்க முடியாது. இந்தச் சட்டம் விளையாட்டு அமைப்புகளுக்கும் வீரர்களுக்கும் நல்லதே.இந்தச் சட்டத்தின் கீழ் அனைத்து விளையாட்டு அமைப்புகளையும் கொண்டுவரவேண்டும்.யாருக்கும் விலக்களிக்கக் கூடாது என்றார்.

இது குறித்து பி.சி.சி.ஐ.யின் துணைத் தலைவர் ராஜீவ் சுக்லா கூறுகையில்;

நான் இது வரை அந்த வரைவு மசோதாவைப் பார்க்கவில்லை.நான் அதைப் பார்க்க வேண்டும். அரசிடமிருந்து எந்தவொரு உதவியையும் பெறாத ஓர் அமைப்பை எப்படி ஆர்.டி.ஐ.யின் கீழ் கொண்டு வரமுடியுமென்று கேள்வியெழுப்பினார்.

முன்னாள் வீரர் அஜய் ஜடேஜா கூறுகையில்;

பி.சி.சி.ஐ.சிறப்பாக தன்னுடைய பணியை செய்து வருகிறது;அரசு ஒரு சட்டத்தை நிறைவேற்றும்போது அதிலிருந்து தனிப்பட்ட ஒருவரோ தனிப்பட்ட ஓர் அமைப்போ விலக்கு கோர முடியாது.சட்டம் என்று வந்துவிட்டால் அது அனைத்து விளையாட்டு அமைப்புகளுக்குமே பொருந்தும்.அரசின் இந்த முடிவில் தவறிருப்பதாக நினைக்கவில்லை.

அரசின் இந்தச் சட்டத்துக்கு பி.சி.சி.ஐ. ஏன் எதிர்ப்புத் தெரிவிக்கிறது.பி.சி.சி.ஐ.யின் வழிமுறைகளை மாற்ற வேண்டுமென்றோ விளையாட்டை பிரபலப்படுத்தக்கூடாது என்றோ அரசு கூறவில்லை.அவர்களின் செயல்பாடுகளிலும் தலையிடவில்லை.அப்படி இருக்கும்போது ஏன் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டுமென்று கூறியுள்ளார்.



# அதிர்ச்சியடைய வைத்த அணி உரிமையாளர்

புதிய உரிமையாளரால் சுவிஸின் நியூசாட்டல் கால்பந்து அணியில் பதற்றம் நீடிப்பதுடன் வீரர்களும் கடும் எரிச்சலடைந்துள்ளனர்.

சுவிஸின் லீக் கால்பந்து அணியான நியூசாட்டல் எக்ஸ்மாஸ் கடன் பிரச்சினையில் தவித்தது. இந்த அணியை கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் செச்சன் தொழிலதிபர் புலாட் சாகவ் வாங்கி உரிமையாளரானதை.அவர் அணியின் புதிய உரிமையாளரெனத் தொடர்ந்து நியூசாட்டல் அணியை முதல் பிரிவு போட்டியிலிருந்து ஐரோப்பிய கால்பந்து லீக் போட்டிக்கு கொண்டு செல்வதாக உறுதியளித்தார்.

அவரது புதிய வாக்குறுதி வீரர்களுக்கும் அணியின் அனுசரணையாளர்களுக்கும் இதர பங்குதாரர்களுக்கும் நம்பிக்கையளித்தது.ஆனால் கடந்த 4 மாதத்தில் சாகவ் வின் நடவடிக்கை வீரர்கள் முதல் அனைவரையும் அதிர்ச்சியடையச் செய்துள்ளது. அவர் சர்வாதிகாரி போல நடந்து கொள்கிறார் என வீரர்கள் உட்பட அனைத்துத் தரப்பினரும் எரிச்சலடைந்தனர்.

கடந்த மே மாதம் 29 ஆம் திகதி சுவிஸ் கிண்ண கால்பந்து இறுதிப்போட்டியின் இடைவேளையின் போது நியூசாட்டல் எக்ஸ்மாஸ் அணியுடன் 0-2 கோல் கணக்கில் சியோன் கால்பந்து அணிக்கு எதிராக பின்னடைவு பெற்றிருந்தது.அப்போது எக்ஸ்மாஸ் அணி உரிமையாளர் சாகவ் ஆத்திரமடைந்து வீரர்கள் அறைக்கு சென்று உங்களை எல்லாம் கொலை செய்து விடுவேன் என ஆத்திரத்துடன் கத்தினார்.

இதனால் வீரர்கள் மேலும் அதிருப்திக்குள்ளானார்கள்.அவர்கள் அந்த மன நிலையிலேயே ஆட்டத்தின் இதரபகுதியை ஆடினார்கள்.இதனால் இறுதிப்போட்டியில் நியூசாட்டல் எக்ஸ்மாஸ் அணிக்கு தோல்வியே கிடைத்தது.

இத்தோல்விக்கு பின்னர் சூரிச்சின் பயிற்சியாளர் பெர்னார்ட் சாலண்டஸ் நீக்கப்பட்டார்.புதிய சீசனில் நியூசாட்டல் அணி 2 ஆவது தொடர் தோல்வி பெற்றதைத் தொடர்ந்து அந்த அணியின் விளையாட்டு இயக்குநர் மற்றும் முன்னாள் பார்சிலோனா மற்றும் பிரேசில் அதிரடி வீரரான சோனி அன்டர்சன் அவரது பயிற்சியாளர் மற்றும் முதல் அணியின் சிரேஷ்ட 3 வீரர்கள் ஆகியோரை சாகவ் நீக்கினார்.

சாகவ் வின் அதிரடி நடவடிக்கைகளால் நியூசாட்டல் அணி எக்ஸ்மாஸ் அணி தொடர்ந்து கவலைக்குள்ளாகியிருக்கிறது.இந்த அணி 1970 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.இந்த அணி 2 கிளப்புகளின் இணைப்பில் தோன்றியது.இது இருமுறை சுவிஸ் லீக்கில் வென்றுள்ளது.1987 மற்றும் 1988 ஆம் ஆண்டுகளில் அது பரிசுக் கிண்ணத்தை பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எகிப்தில் நடந்தது இந்தியாவில் நடக்குமா?

இப்போது உலக செய்திகள் முழுவதும் காந்திக்குல்லாய் போட்ட அன்னா ஹசாரேயைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கின்றன.
கமல் நடித்த இந்தியன் திரைப்படத்தில் வந்த இந்தியன் தாத்தா போல ஒரு பாத்திரம் இவர். இந்தியாவில் உள்ள ஊழலை எதிர்த்து தனது போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.சட்டம், நீதி, நிர்வாகம் ஆகிய சட்டவாட்சியின் மூன்று துறைகளும் ஊழல் என்ற சீமெந்தால் குழைத்துக் கட்டப்பட்ட ஒரு நாட்டில் ஊழலுக்கு எதிராக போராட்டம். இதனால் அந்த நாட்டின் அரசுக் கட்டிடமே கொல கொலக்கத் தொடங்கியிருக்கிறது.

இந்திய நடுவண் அரசால் நிலைமைகளை கட்டுக்குள் கொண்டுவர முடியாத நிலை ஏற்பட்டு, இப்போது அமெரிக்காவே இதன் பின்னணியில் இருப்பதாக அது குற்றஞ் சுமத்தியுள்ளது. இந்திய நாட்டை துண்டு துண்டாக உடைப்பதற்கு அமெரிக்கா சதி செய்கிறது என்றளவுக்கு அதன் கோபம் உச்சமடைந்துள்ளது. மறுபுறம் இதற்கும் தமக்கும் யாதொரு தொடர்பும் கிடையாது என்று அமெரிக்கா வழமைபோல் மறுத்திருக்கிறது. இருந்தாலும் அமெரிக்கா மீது குற்றஞ் சுமத்தி விடயத்தை திசை திருப்ப முடியாதளவுக்கு வெள்ளம் தலைக்குமேல் போய்விட்டது.

2 ஜி உலக மகா ஊழல், சுவிஸ் வங்கியில் நாட்டின் பணத்தை பொதுக்கிய அரசியல் தலைவர்கள் என்று முற்று முழுதான ஊழல் அம்பலத்திற்கு வந்துள்ளது. ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் உண்மை இருப்பதை ராசா, கனிமொழி கைதுகளே உணர்த்துகின்றன. இந்த நிலையில் அமெரிக்காவைக் குற்றஞ் சுமத்தி 2 ஜி ஊழலை மறைக்க முடியாதல்லவா?

எகிப்தில் நடந்தது போன்ற ஒரு போராட்டம் இந்தியாவிற்குள் வரலாம் என்பதை பல மாதங்களுக்கு முன்னரே அறியக்கூடியதாக இருந்தது. டியூனிசியா, எகிப்து,யேமன், சிரியாவுக்குள் நுழைந்த மக்கள் போராட்டம் அதே வழியாக பயணித்து இந்தியா,இலங்கை, பர்மா வழியாக சீனாவுக்கு போகும் என்பதும் மிக வெளிப்படையாகவே தெரிந்தது.

ஆசிய தலைவர்கள் பூனை கண்களை மூடினால் உலகம் இருண்டுவிடும் என்று கருதுவதைப் போல் இதையெல்லாம் பார்க்காமல் கண்களை மூடினார்கள். இந்தப் போராட்டங்களை தமது நாடுகளில் ஒளிபரப்புவதை தடையும் செய்தார்கள்.

ஆனால், இணையம்,பேஸ்புக் போன்றன மக்களிடம் அவற்றை வெகு விரைவாக எடுத்துச் சென்றுவிட்டன. தலைவர்கள் இறுகக் கண்களை மூடிக்கொண்டிருக்க அந்தக் குருட்டுப் பூனைகளை இவை கச்சிதமாக ஏமாற்றிவிட்டு உள்ளே புகுந்துவிட்டன. கூகுள் மீது சீனாவும் இந்தியாவும் கொண்ட கோபம் இதற்கு ஓர் உதாரணம். இணையம் மூலம் விக்கிலீக்ஸ் இரகசியங்களை கசியவிடுகிறது என்ற போர்வையில் அம்பலமான செய்திகள் பல நாடுகளின் ஆட்சியாளரின் கட்டில்களை ஆட்டங்காண வைத்தன. விக்கிலீக்ஸ் இந்திய தலைவர்களின் சுவிஸ் பண முதலீடு தொடர்பான தகவல்களை தொடர்ந்து அம்பலப்படுத்தியது. இந்தியத் தலைவர்கள் ஊழல் செய்கிறார்கள் என்பது மக்கள் மனதில் ஆழமாக படிவதற்கு விக்கிலீக்ஸ் பிரதான காரணமாகியது.

இது நடந்து கொண்டிருக்க;

இரண்டாவது உலக யுத்தத்திற்கு பிறகு உலகப் பொருளாதார மந்தம் மேலைநாடுகளில் தலைவிரித்தாட தொடங்கிவிட்டது. மூன்றாவது உலக யுத்தம் ஒன்றை நடாத்தி மறுபடியும் பொருளாதாரத்தை சீர்செய்ய முடியாது.மூன்றாம் உலகப் போர் அணுப் போராக மாறி முழு உலகத்தையும் அழித்துவிடும்.ஆகவே புதுவகையான போர் ஒன்று தேவைப்பட்டது. அது டியூனிசியாவில் ஆரம்பித்தது. கடாபியின் வெளியேற்றம் இன்றோ நாளையோ என்ற நிலையில் இருக்கிறது. இன்று சிரிய சர்வாதிகாரி ஆஸாட்டை பதவி விலகிப் போகும்படி அமெரிக்க அதிபர் அறிவித்துள்ளார். இப்போது அமெரிக்காவை இந்தியா குற்றஞ் சுமத்தியுள்ளது.

இப்பொழுது நடைபெறும் மக்கள் போராட்டம் எண்ணெய் வளமுள்ள நாடுகளுக்குள் நுழைந்து உலகின் பொருளாதார வளர்ச்சின் முன்னணி நோக்கி செல்லும் சீனா, இந்தியாவிற்குள்ளும் நுழையும் என்பது வரலாற்றின் யதார்த்தமே. அன்னா ஹசாரே ஆரம்பித்துள்ள ஊழலுக்கு எதிரான போராட்டம் எகிப்தில் ஏற்படுத்திய மாற்றத்தைப் போல இந்திய அரசியலில் மாபெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதை இந்தியத் தலைவர்கள் காலங்கடந்து உணர்ந்து கொண்டு இப்போது அமெரிக்காவை குற்றஞ் சுமத்தியுள்ளார்கள். ஆனால் 21 ஆம் நூற்றாண்டுக்கான மாற்றங்களை உலகம் சந்திக்கத் தொடங்கிவிட்டது. அதைத் தடுத்து நிறுத்துவது கடல்கோளை தடுப்பதைப் போன்ற செயலாகும். எகிப்து,டியூனிசியா போல ஒரு போராட்டம் இந்தியாவில் ஆரம்பிக்குமா என்று பலர் சந்தேகப்பட்டார்கள். அன்னா ஹசாரே ஆர்ப்பாட்டத்தின் பின்னால் அமெரிக்கா இருக்கிறதென்று இந்தியா குற்றஞ் சுமத்தி அப்படியொரு ஆர்ப்பாட்டம் ஆரம்பித்துவிட்டதாக இப்போது தானே பிரகடனப்படுத்தியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














பூர்ணா

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் கொழும்பு 15, எலி ஹவுஸ் ரோட், 68ஆம் இலக்கத்தில் 2011ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 03ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org